2018 வருடாந்த அறிக்கை
அறுவடைக்கு பின்-முகாமைத்துவ தேசிய நிறுவகம்/கமத்தொழில் அமைச்சு
"தேசிய உணவுப் பாதுகாப்புக்கான அறுவடைக்கு பின்-தொழில் நுட்பம்"

வருடாந்த அறிக்கை
2018

அறுவடைக்கு பின்-முகாமைத்துவ தேசிய நிறுவகம்

தலைமை அலுவலகம்
இலக்கம் 08, பத்தரமுல்ல வீதி, எத்துல்கோட்டே,
ஸ்ரீ லங்கா
தொலைபேசி இலக்கம்: +94-11-2887889
தொலைநகல் இலக்கம்: +94-11-2866846

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
ஜயந்தி மாவத்தை, அனுராதபுரம்
ஸ்ரீ லங்கா
தொலைபேசி இலக்கம்: +94-25-3230004
தொலைநகல் இலக்கம்: +94-25-2223983

இணையத்தள முகவரி: www.ipht.lk

தேசிய அறுவடைக்கு பின்- முகாமைத்துவ நிறுவகம்
இலக்கம் 08
பத்தரமுல்ல வீதி
எத்துல்கோட்டே.

கௌரவ கமத்தொழில் அமைச்சர்
கமத்தொழில் அமைச்சு
இலக்கம் 288
ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை
ராஜகிரிய

கௌரவ அமைச்சர் அவர்கட்கு,

வருடாந்த அறிக்கை - 2018

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14 (2) ஆம் பந்தியின் பிராகரம் 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய அறுவடைக்கு பின்- முகாமைத்துவ நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையையும் மற்றும் கணக்குகள் அடங்கிய கூற்றையும் தங்களின் மேலான கவனத்திற்காக சமர்ப்பிக்கின்றேன்.

இங்ஙனம் - உண்மையுள்ள

ரீ.எச்.எம்.பி. சாகர
தலைவர்
தேசிய அறுவடைக்கு பின்-முகாமைத்துவ நிறுவகம்

சட்டமும் சட்டவாக்கங்களும்

அறுவடைக்கு பின்-முகாமைத்துவ தேசிய நிறுவகம் (முன்னர் அறுவடைக்கு பின்-தொழில் நுட்ப நிறுவகம் என அழைக்கப்பட்டு வந்த) கமத்தொழில் அமைச்சினது செயல்நோக்கின் கீழ் இயங்குகின்றது. இந்த நிறுவகம் சகல விவசாயப் பயிர்கள் தொடர்பிலும் அறுவடைக்கு பிற்பட்டகால ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்ளும் நோக்கத்தின் நிமித்தம் 1137/10 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் அதி விஷேட வர்த்தமானி மூலம் 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. புதிதாக தாபிக்கப்பட்டுள்ள இந்த நிறுவகம் 1976 ஆம் ஆண்டில் FAO/UNDP உதவியுடன் அனுராதபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த நெற் சந்தைப்படுத்தல் சபையினது அரிசி பதனிடுகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் (RPRDC) பொறுப்புப் பணிகளை பொறுப்பேற்றுள்ளது. இந்தப் புதிய நிறுவகத்திற்கு அறுவடைக்கு பிற்பட்டகால ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி விடயங்களை மட்டுமன்றி அரிசி மற்றும் தானியங்கள் அதே போல் ஏனைய களப் பயிர்கள், மரக்கறிப் பயிர்கள், வாசனைப் பயிர்கள் மற்றும் வெட்டுப் பூந்தாவரப் பயிர்கள் என்பன தொடர்பிலும் அத்தகைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்வதற்கான பொறுப்புக்களும் மற்றும் தொழிற்பாடுகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குறித்த நிறுவகத்தின் பெயர் 2093/26 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு அரசாங்கத்தின் அதிவிஷேட வர்த்தமானி மூலம் 2018.10.27 ஆம் திகதி அறுவடைக்கு பின்-முகாமைத்துவ தேசிய நிறுவகம் என மாற்றப்பட்டது.

அதிகார ஆணைகள்

குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள அதிகார ஆணைகளுக்கு இணங்க, இலங்கையில் அறுவடைக்கு பின்-தொழில் நுட்ப அபிவிருத்தியின் நிமித்தம் ஆராய்ச்சி சார்ந்த தேவைகளை இனங்கண்டு, முந்துரிமையளித்து அத்தகையவை தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தும் நோக்கத்திற்காக சம்பந்தப்படுகின்ற சகல முகவர்நிலையங்களையும் ஒன்றிணைப்பதற்கான ஒருங்கிணைப்பு கேந்திர நிலையமாக தொழிற்படுவதற்கு இந்த நிறுவகம் எதிர்பார்க்கப்படுகின்றது.

தூரநோக்கு

தேசிய உணவுப் பாதுகாப்பை நோக்கிய அறுவடைக்கு பின்-நிலைபெறுதகு அபிவிருத்தியில் மிகச்சிறந்த நிலையமாக விளங்குதல்.

செயற்பணி

போட்டித்தன்மை வாய்ந்த விலையில் உள்நாட்டு சந்தைகளுக்கும் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கும் உதவக்கூடிய வகையில் தரத்திலும் பாதுகாப்பிலும் உயர்ந்த உன்னத உணவுப் பொருட்கள் அடங்கலாக விவசாய உற்பத்தியினதும் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களினதும் விநியோக பெறுமான சங்கிலிகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வினைத்திறன் வாய்ந்த பயனுள்ள அறுவடைக்கு பின்-தொழில் நுட்பம் சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகளினூடாக தேசிய உணவுப் பாதுகாப்புக்கான நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்கை அடைதல்.

உள்ளடக்கம்

	பக்கம்
சட்டமும் சட்டவாக்கமும்	03
அதிகார ஆணைகள்	03
தூரநோக்கு	03
செயற்பணி	03
முகாமைத்துவ சபை	04
நிறுவனக் கட்டமைப்பு	05
சிரேஷ்ட முகாமைத்துவம்	06
முகாமைத்துவக் குழுக்கள்	07
தலைவரின் செய்தி	08
நிறைவேற்று அறிக்கை	09
செயலாற்றுகை தொடர்பான முக்கிய குறிப்புகள்	18
ஆற்றல் கட்டியெழுப்பல் மற்றும் உற்பத்தித்திறன் அபிவிருத்தி	55
விருதுகளும் மற்றும் நன்மதிப்புகளும்	56
வெளியீடுகள், சமர்ப்பணங்கள் மற்றும் ஆக்கவுரிமைகள்	57
சமூக, நலன்புரி மற்றும் சமய செயற்பாடுகள்	59
மனித வளங்கள்	61
நிறைவேற்றுப் பதவியணி	63
நிதிக் கூற்று 2018	

முகாமைத்துவ சபை

2018 திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கான விபரம்

தலைவர்

திரு ரீ.எச்.எம்.பி. சாகர

உப தலைவர்

திரு நிசாந்த லியனகே

உறுப்பினர்கள்

திரு ஆர்.எம்.டீ.கே.ஜி.என்.பீ. ரணதுங்க

சட்டத்தரனி எஸ்.பி. குமார குணரத்ன

திரு எம்.எஸ். கருனாரத்ன

திரு பிரியந்த ஜயதிஸ்ஸ


திரு கனேகொட

சபைக்கான செயலாளர்

பொறியியலாளர் திரு மகேஸ் திஸாநாயக்க
நிறுவகத்தின் பதில் பணிப்பாளர்

நிறுவனக் கட்டமைப்பு

அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் (ஆ.தி.) காணப்படுகின்ற நிறுவனக் கட்டமைப்பு



குறித்த இந்த நிறுவகம் 2018 ஆம் ஆண்டில் தனது பிரிவுகளை பின்வருமாறு மீள்கட்டமைத்துள்ளது. நிறுவனக் மீள்கட்டமைப்பு நடபடிமுறைக்கு இணங்க, ஒட்டுமொத்த நிறுவனக் கட்டமைப்பும் ஆளணியும் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. ஆராய்ச்சிப் பிரிவு
2. பொறியியல் பிரிவு
3. விஸ்தரிப்புப் பிரிவு
4. அபிவிருத்திக் கருத் திட்டப் பிரிவு
5. ஆய்வுகூட சேவைகள் பிரிவு
6. திட்டமிடுகை மற்றும் கண்காணிப்புப் பிரிவு
7. நிருவாகப் பிரிவு
8. நிதிப் பிரிவு
9. கல்விகள் பிரிவு
10. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

சிரேஷ்ட முகாமைத்துவம்

2018 திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கான விபரம்

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்
பொறியியலாளர் மகேஸ் திஸாநாயக்க

மேலதிகப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றல்)
பொறியியலாளர் எச்.எம்.ஏ.பி. ரத்நாயக்க

மேலதிகப் பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் நிதி)
திரு ஆர்.கே.ஏ.பி. ராமநாயக்க

முகாமைத்துவக் குழு

ஆராய்ச்சிப் பிரிவு
கலாநிதி (திருமதி) நிலந்தி விஜேவர்த்தன
HOD | பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர்

பொறியியல் பிரிவு
பொறியியலாளர் பீ.டீ.எம்.பி. பண்டார
HOD | எந்திரப் பொறியியலாளர்

விஸ்தரிப்புப் பிரிவு
திருமதி சாமிந்தி திஸாநாயக்க
HOD | சிரேஷ்ட விஸ்தரிப்பு உத்தியோகத்தர்

ஆய்வுகூட சேவைகள் பிரிவு
திரு சமிந்த குணவர்த்தன
HOD | ஆராய்ச்சி உத்தியோகத்தர்

அபிவிருத்திக் கருத் திட்டப் பிரிவு
திரு டப்ளியூ.எம்.சி.பீ. வாசல
HOD | சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்

திட்டமிடுகை மற்றும் கண்காணிப்புப் பிரிவு
திருமதி ருவங்கா ரத்நாயக்க
HOD | ஆராய்ச்சி உத்தியோகத்தர்

நிருவாகப் பிரிவு
திரு ஆர்.கே.ஏ.பி. ராமநாயக்க
HOD | மேலதிகப் பணிப்பாளர் (நிருவாகம், நிதி)

நிதிப் பிரிவு
திரு நிஹாகா இலங்கசிங்க
HOD | கணக்காளர்

கல்விகள் பிரிவு
பொறியிய. (திருமதி) தமிந்த அத்தபத்து
HOD | எந்திரப் பொறியியலாளர்

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
திரு ஆர்.எம்.டீ. ரத்நாயக்க
HOU | உள்ளகக் கணக்காய்வாளர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

பெயர்	பதவிப்பெயர்
திரு எம்.எஸ். கருனாரத்ன	தலைவர்
திரு ஆர்.எம்.டீ.கே.ஜி.என்.பீ. ரணதுங்க	உறுப்பினர்
பொறியியலாளர் மகேஸ் திஸாநாயக்க	செயலாளர்
திரு ஆர்.எம்.டீ. ரத்நாயக்க	அமைப்பாளர்
திரு ஜே.ஏ.எஸ்.டீ. பெரேரா	அவதானிப்பாளர்
திரு யூ.எஸ்.எல். குமார	அவதானிப்பாளர்

நிருவாகக் குழு

பெயர்	பதவிப்பெயர்
திரு ஆர்.எம்.டீ.கே.ஜி.என்.பீ. ரணதுங்க	தலைவர்
மேலதிகப் பணிப்பாளர் (நி.நி.)	செயலாளர்
பணிப்பாளர்	உறுப்பினர்
நிருவாக உத்தியோகத்தர்	உறுப்பினர்

நிதிக் குழு

பெயர்	பதவிப்பெயர்
திரு எம்.எஸ். கருனாரத்ன	தலைவர்
HOD/நிதி	செயலாளர்
மேலதிகப் பணிப்பாளர் (நி.நி.)	உறுப்பினர்

சட்டக் குழு

பெயர்	பதவிப்பெயர்
சட்டத்தரனி திரு எஸ்.பி.கே. குணரத்ன	தலைவர்
மேலதிகப் பணிப்பாளர் (நி.நி.)	செயலாளர்
பணிப்பாளர்	உறுப்பினர்

வருமான அபிவிருத்திக் குழு

பெயர்	பதவிப்பெயர்
திரு பிரியந்த ஜயதிஸ்ஸ	தலைவர்
HOD/அபிவிருத்திக் கருத் திட்டம்	செயலாளர்
மேலதிகப் பணிப்பாளர் (நி.நி.)	உறுப்பினர்
மேலதிகப் பணிப்பாளர் (R, TT)	உறுப்பினர்
HOD/விஸ்தரிப்பு	உறுப்பினர்
HOD/பொறியியல்	உறுப்பினர்
HOD/ஆய்வுகூட சேவைகள்	உறுப்பினர்
HOD/திட்மிடுகை மற்றும் கண்காணிப்பு	உறுப்பினர்

அபிவிருத்திக் கருத் திட்டக் குழு

பெயர்	பதவிப்பெயர்
திரு ஏ.எம்.ஏ.ஜி.என். கருனாதிலக்க	தலைவர்
HOD/திட்டமிடுகை மற்றும் கண்காணிப்பு	செயலாளர்
HOD/விஸ்தரிப்பு	உறுப்பினர்
HOD/அபிவிருத்திக் கருத் திட்டம்	உறுப்பினர்

ஆராய்ச்சி வெளியீட்டுக் குழு

பெயர்	பதவிப்பெயர்
மேலதிகப் பணிப்பாளர் (R, TT)	தலைவர்
HOD/விஸ்தரிப்பு	செயலாளர்
HOD/ஆராய்ச்சி	உறுப்பினர்
HOD/பொறியியல்	உறுப்பினர்
HOD/திட்டமிடுகை மற்றும் கண்காணிப்பு	உறுப்பினர்

தலைவரின் செய்தி

இந்த நிறுவகம் முன்னர், அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப நிறுவகம் (அ.பி.தொ.நி.) என்ற பெயரில் இயங்கியது. இது தற்பொழுது அறுவடைக்கு பின்-முகாமைத்துவ தேசிய நிறுவகம் என பெயர் மாற்றம் பெற்று தற்பொழுது கமத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது. அறுவடைக்கு பின்-கைத்தொழிலின் சகல பிரிவுகளையும் இந்த நிறுவகம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும் குறிக்கோளுடன் தனது செயற்பாடுகளின் மூலமாக அடையாளப்படுத்துகின்றது. அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப நிறுவகம் நவதானியங்கள், பருப்பு வகைத் தானியங்கள், எண்ணெய் விதைகளை தரும் தாவரங்கள், ஏனைய வயல் பயிர்கள், பழப் பயிர்கள், மரக்கறிப் பயிர்கள், வாசனைப் பயிர்கள், அலங்காரத் தாவரங்கள் மற்றும் வெட்டுப் பூந்தாவரங்கள் முதலியன தொடர்பான அறுவடைக்கு பின்-ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்ளும் நோக்கத்தின் நிமித்தம் 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தினது சட்டஏற்பாடுகளின் பிரகாரம் 1137/10 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் மூலம் 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. இந்த நிறுவகத்தின் பெயர் . 2093/26 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோலிஷ குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் மூலம் 2018.10.27 ஆம் திகதி அறுவடைக்கு பின்-முகாமைத்துவ தேசிய நிறுவகம் என மாற்றப்பட்டுள்ளது.

தேசிய உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், இந்த நிறுவகம் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 13 ஆராய்ச்சிக் கருத் திட்டங்களையும் மற்றும் 08 அபிவிருத்திக் கருத் திட்டங்களையும் நடத்தியுள்ளது. இந்த சகல வகையான கருத் திட்டங்களின் மூலமாக பொருளாதார ரீதியில் மிக முக்கியமான விவசாய நுகர்வுப் பொருட்களின் விநியோக மற்றும் பெறுமான சங்கிலிகளின் முக்கிய விடய அம்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. மேலும், அக்கறையுடைய தரப்புகளின் செய்துகாண்பிப்புகள் மற்றும் தொடர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றினூடாக விஷேடமாகவும் மற்றும் அபிவிருத்திக் கருத் திட்டங்களினூடாக பொதுவாகவும் அறுவடைக்கு பிற்பட்டகால தொழில் நுட்ப பிரிவில் சரியான அறுவடைக்கு பிற்பட்டகால செயன்முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. கருத் திட்டத்திலிருந்து நன்மை பெறும் நபர்களுக்கும் தரம் மற்றும் கணிய அளவு ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படுகின்ற அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைப்பதில் முக்கிய விடய அம்சங்களாக இனங்காணப்பட்டுள்ள வகைப்படுத்தல், தரம் பிரித்தல், பாதுகாப்பான முறையில் கனியவைத்தல், பொதியிடுதல் மற்றும் ஏற்றியிறக்குதல் முதலிய செயல் நடவடிக்கைகளின் நிமித்தம் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டன. இந்த நிறுவகம் அறுவடைக்கு பிற்பட்டகால செயன்முறைகளை நாடளாவிய ரீதியில் மேம்படுத்தும் நோக்கில் பழங்களையும் கையாளும் மற்றும் பதனிடும் அலகுகளை தாபித்தது.

இதன் நிரலில், பழங்களை கையாளும் மற்றும் பதனிடும் நிமித்தம் மாம் பழங்களுக்கு (நாடளாவிய ரீதியில் 44 அலகுகள்), வாழைப் பழங்களுக்கு (அனுராதபுர மாவட்டத்தில் 12 அலகுகள்), பப்பாசிப் பழங்களுக்கு (அனுராதபுர மாவட்டத்தில் 12 அலகுகள்), கொய்யாப் பழங்களுக்கு (அனுராதபுர மாவட்டத்தில் 27 அலகுகள்) என பழங்களை கையாளும் மற்றும் பதனிடும் அத்தகைய அலகுகளை இந்த நிறுவகத்தினால் தாபிக்க முடிந்தது. 'தரத்தில் சிறந்த பழங்களில் பாதுகாப்பாக கனிந்த பழங்களை உற்பத்தி செய்வது/உற்பத்தி செய்து வழங்குவது இந்தக் கருத் திட்டங்களின் மிக முக்கிய கருப்பொருளாக அமைந்தது. பழங்களை கையாளும் மற்றும் பதனிடும் இத்தகைய அலகுகள் தாபிக்கப்பட்டதால், நன்மை பெறும் நபர்களின் வாழ்க்கைத் தரங்கள் குறிப்பாக உயர்வடைந்துள்ளன. மேலும், தரத்தில் சிறந்த மாம் பழங்கள், வாழைப் பழங்கள், பப்பாசிப் பழங்கள் மற்றும் கொய்யாப் பழங்கள் என்பன போன்ற பழ வர்க்கங்கள் நியாயமான மலிவான விலைகளில் நுகர்வோருக்கு விநியோகிக்கப்படுகின்றன. இதனால் விவசாயிகளுக்கு மட்டுமன்றி பழ விநியோக சங்கிலியில் சம்பந்தப்படுகின்ற அக்கறையுடைய ஏனைய சகல தரப்புகளுக்கும் அதிகளவு வருமானமும் உறுதிப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத் திட்டங்களுக்கு கமத்தொழில் அமைச்சின் ஊடாக 95.58225 மில்லியன் ரூபா நிதி கிடைத்தது.

இறுதியாக, மூன்று கருத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதையடுத்து, அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகள் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவும் வேளையில் நாட்டின் விவசாயத்தில் கணிசமான குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்த வழிவகுக்கும்.
2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் பார்க்கின்ற போது, எதிர்வருகின்ற ஆண்டுகளில் அறுவடைக்கு பிற்பட்டகால கைத்தொழில் செயற்பாடுகளை இந்த நிறுவகத்தினால் மேம்படுத்த முடியும் என நான் நம்புகின்றேன்.

ரீ.எச்.எம்.பி. சாகர
தலைவர்

நிறைவேற்று அறிக்கை | ஆண்டின் ஓர் பார்வை


2018 ஆம் ஆண்டு இந்த நிறுவகத்திற்கு வெற்றிகரமான ஆண்டாக விளங்கியது. நாட்டின் பழங்கள் மற்றும் காய்கறிகள் உள்ளடங்கும் துறைக்கு விஷேட கவனத்தை செலுத்துவது உட்பட விவசாயப் பயிர்களின் விநியோக மற்றும் பெறுமான சங்கிலி சார்ந்த செயன்முறைகளின் மேம்பாடு நிமித்தம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, விஸ்தரிப்பு, பயிற்சி, உசாதுணை மற்றும் ஏனைய சேவைகள் முதலிய சகல நான்கு பிரதான செயற்பாடுகளும் நிரல்படுத்தப்பட்டன.



பருப்பு மைய சிறுமணித் தண்டு



தாமரை பழுதடையாமல் நீண்டகால பாவனைக்கு ஆயுளை மேம்படுத்துதல்



தக்காளியின் பாவனை ஆயுளை மேம்படுத்துவதற்கான அனுகூல களஞ்சிய நிலைமைகள்

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில், முப்பத்து இரண்டு (32) கருத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வருகின்ற மூன்று (03) கருத் திட்டங்களும் மற்றும் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பன்னிரெண்டு (12) கருத் திட்டங்களும் இந்தக் கருத் திட்டங்களில் உள்ளடங்குகின்றன.

இவை தவிர, மூன்று (03) ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள் அரச மற்றும் தனியார் பங்காளித்துவ கருத் திட்டங்களாக செயற்படுத்தப்பட்டன. இந்தக் கருத் திட்டங்களுக்கு தனியார் துறையினரால் நிதி அளிக்கப்பட்டது. இரண்டு கருத் திட்டங்கள் (02) NSF மற்றும் NRC மானியங்களின் கீழ் நிதியளிக்கப்படும் வெளிக்கள ஆராய்ச்சிக் கருத் திட்டங்களாக செயற்படுத்தப்பட்டன.


மேலும் பனினிரெண்டு (12) கருத் திட்டங்கள் மாணவர் கருத் திட்டங்களாக செயற்படுத்தப்பட்டன. இந்தக் கருத் திட்டங்கள் இந்த நிறுவகத்தின் பொறியியலாளர்கள், ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரினால் மேற்பார்வை செய்யப்பட்டன.

புதிய வெளியீடுகள்

- விவசாய நுகர்வுப் பொருட்களின் அறுவடைக்கு பிற்பட்டகால தரத்தை மேம்படுத்துவதற்கு சரியான புதிய தொழில் நுட்பங்கள்
- சந்தையில் தரத்தில் உயர்ந்த பழங்களின் கிடைப்புத்தன்மையை அதிகரித்தல்
- நுகர்வோருக்கு தரத்தில் உயர்ந்த உற்பத்திகள் மற்றும் உற்பத்தித் தரப்புகளின் அதிகரித்த வருமானம்

அறுவடைக்கு பிற்பட்டகால தேசிய ஆராய்ச்சி மாநாடு 2018

'எமது உணவு - எமது எதிர்காலம்' என்ற தலைப்பில் அறுவடைக்கு பிற்பட்டகால 2-வது தேசிய ஆராய்ச்சி மாநாட்டை எம்மால் ஏற்பாடு செய்து 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆம் திகதி நடத்த முடிந்தது.



அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப துறையில் நாட்டின் பிரபல விஞ்ஞானியும் NIPHM நிறுவகத்தின் முன்னாள் தலைவருமான கலாநிதி சாந்தி வில்வின் அவர்கள் 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அறுவடைக்கு பிற்பட்டகால தேசிய ஆராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்டிருந்தவர்களுக்கு மத்தியில் பிரதம பேச்சாளராக உரையாற்றும் காட்சி







விஸ்தரிப்பு

அபிவிருத்திக் கருத் திட்டங்களினூடாக புதிய பொருத்தமான தொழில் நுட்பங்களை பின்பற்றுவதன் மூலம் தேசிய உணவுப் பாதுகாப்பை நோக்கிய பயணம்







அபிவிருத்திக் கருத் திட்டங்களினூடாக, நாடு முழுதிலும் 2018 ஆம் ஆண்டில் மாம் பழம், பப்பாசி, வாழைப் பழம் மற்றும் கொய்யாப் பழம் போன்ற பழங்களை கையாளும் மற்றும் பதனிடும் அலகுகள் தாபிக்கப்பட்டன.

கீழ்காணும் வர்த்தகப் பெயரில் பத்து வகையான உற்பத்திகள் 2018 ஆம் ஆண்டு சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.


போகஹகந்த மாம் பழம்
கல்ஒயா மாம் பழம்
வெல்லவாய மாம் பழம்
யாழ்ப்பாண மாம் பழம்
மினுவங்கொட மாம் பழம்
கலேவெல மாம் பழம்
எப்பாவெல மாம் பழம்

அத்துடன்

ராஜாங்கன வாழைப் பழம்
தம்புத்தேகம பப்பாசிப் பழம்
மகாஇளுப்பள்ளம கொய்யாப் பழம்

புதிய உற்பத்தி நல்ல விலைகள், பாதுகாப்பான உற்பத்தி மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த சந்தை வாய்ப்பு என்பவற்றை





● மாம் பழம் 11, ● வாழைப் பழம் 10, ● கொய்யாப் பழம் 04, ○ பப்பாசிப் பழம் 08

பயிற்சி

இந்த நிறுவகம் தானியங்கள், நவதானியங்கள், கிழங்குகள், நார் வகைப் பொருட்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் முதலிய பிரிவுகளில் உற்பத்தித் தரப்புகளுக்கும், பதனிடும் தரப்புகளுக்கும், வர்த்தகர்களுக்கும், பல்கலைக்கழகங்களினதும் மற்றும் ஏனைய கல்வி நிறுவகங்களினதும் மாணவர்களுக்கும் உற்பத்தி/விஸ்தரிப்பு மைய வதிவிட மற்றும் வதிவிடம் சாரா பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துகின்றது.

குறித்த அறிக்கையிடும் ஆண்டு காலப் பகுதியில் கல்வி விஜயங்கள் அடங்கலாக நாற்பத்து ஒன்பது (49) பயிற்சிப் பாடநெறிகள் நடத்தப்பட்டு 1522 தனிநபர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். நூற்று பத்து (110) வதிவிட சாரா பாடநெறிகள் கள நிலையங்களில் நடத்தப்பட்டன. 2962 தனிநபர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

அவுஸ்திரேலியாவிலிருந்து மாணவர் குழுவொன்று அறுவடைக்கு பின்-பொறியியல் விடயத்தில் ஒரு பயிற்சியின் நிமித்தம் இந்த நிறுவகத்திற்கு விஜயம் செய்திருந்தது. இந்தக் குழுவுக்கு இந்த நிறுவகத்தில் 2 மாதங்கள் அத்தகைய பயிற்சிக்கு வசதியளிக்கப்பட்டது.



அரிசி ஆலை இயந்திராதிகள் பற்றிய NVQ பாடநெறி

இந்த நிறுவகம் TVEC இன் உதவியுடன் அரிசி ஆலை இயந்திராதிகள் பற்றிய 3 ஆம் மற்றும் 4 ஆம் மட்ட (NVQ மட்டம் 3 மற்றும் 4) தேசிய வாழ்க்கைத்தொழில் பயிற்சி தகைமை பாடநெறியை தயாரிக்கும் பணியை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த வகையான NVQ நிகழ்ச்சித் திட்டம் நாட்டில் காணக்கூடியதாகவில்லை. ஆகையால், அரிசி ஆலை உற்பத்தித் தொழிலில் ஈடுபடுகின்ற திறமை வாய்ந்த தொழிலாளர் தரப்புகளுக்கு மத்தியில் இந்தப் பாடநெறியை விளம்பரப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஆறு மாத கால பாடநெறியாக 30 மாணவர்கள் தொகுதியைக் கொண்டு 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க முடியும்.

உசாதுணை, ஆலோசனை மற்றும் ஏனைய சேவைகள்

இந்த NIPHM நிறுவகம் அறுவடைக்கு பிற்பட்டகால கைத்தொழிலில் நேரடியாக அல்லது மறைமுறைக சம்பந்தப்படுகின்ற அரச, தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்களுக்கு உசாதுணை மற்றும் ஆலோசனை சார்ந்த சேவைகளை வழங்குகின்றது. 2016 ஆம் ஆண்டில், IPHT பொதுத் திறைசேரியினது அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் 'களஞ்சியசாலைப் பெறுகைக் கருத் திட்டத்தின்' நிமித்தம் ஒரு ஆலோசனைத் தரப்பாக பணியாற்றியுள்ளது. இந்த ஆலோசனை சேவை 2018 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து வழங்கப்பட்டது. இந்தக் கருத் திட்டத்தின் கீழ், முன்கூட்டி சுத்தமான மற்றும் உலர்த்தும் வசதிகள் அடங்கிய களஞ்சியசாலைகள் எம்பிலிப்பிட்டிய, மெதிரிகிரிய மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் தாபிக்கப்பட்டன.




மேலும், NIPHM அரிசி ஆலை, அரிசி மாவு ஆலை, பருப்பு வகைத் தானியங்கள் கற்றல், வாசனைப் பொருட்கள் பதனிடுதல், காற்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றை உலர்த்தி பழுதடையாமல் வைத்திருத்தல் என்பன போன்ற செயற்பாடுகளுக்கு தனது தொழில் நுட்ப உதவிகளை வழங்கியுள்ளது.
மேலும், கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சு நடத்திய 'குளிர் களஞ்சியங்கள்' தாபிப்பு கருத் திட்டத்திற்கு இந்த NIPHM நிறுவகம் தொழில் நுட்ப ரீதியில் உதவிகளை

வழங்கியது. உசாதுணை சார்ந்த சேவைகள் தொடர்பான விபரங்கள் இந்த அறிக்கையில் அடுத்து வரும் அத்தியாயத்தில் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு வர்த்தக நிலையமாக மேம்படுத்தப்பட்ட ஆய்வுகூட சேவைகள்


அறுவடைக்கு பின்-முகாமைத்துவ தேசிய நிறுவகம் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அக்கறையுடைய தரப்புகளுக்கு ஆய்வுகூட சேவைகளை வழங்கியுள்ளது. இந்த நிறுவகம் எமது அக்கறையுடைய தரப்புகளின் நிமித்தம் ஆய்வுகூட வசதிகளை வழங்கும் பணியை வெளித்தரப்புக்கு ஒப்பபடைக்க தொடங்குகின்றது.




இந்த நிறுவகத்திற்கு ஆய்வுகூட இற்றைப்படுத்தலின் நிமித்தம் 'தேசிய உணவுப் பாதுகாப்பு முன்னெடுப்புத் திட்டத்தின்' கீழ் 26 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளது. இந்தக் கருத் திட்டத்தின் கீழ், நுண்ணுயிரியல் மற்றும் உணவு பதனிடுகை ஆகிய 2 ஆய்வுகூடங்கள் புனர்நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆய்வுகூட சான்றிதழை பெற்றுக் கொள்ளும் நிமித்தம் செயற்பாட்டு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படு வருகின்றன.



அபிவிருத்தி செய்யப்பட்ட நுண்ணுயிரியல் ஆய்வுகூடம்






புனர்நிர்மாணிக்கப்பட்ட உணவு பதனிடும் ஆய்வுகூடம்

அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப துறைக்கு IPHT அபிவிருத்தி செய்துள்ள இயந்திராதிகள்


NIPHM அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப துறையில் உற்பத்தி செய்யப்படும் அல்லது இறக்குமதி செய்யப்படும் இயந்திராதிகளின் பொருத்தப்பாடு பற்றி மதிப்பீடு செய்தது. இந்த நிறுவகம் குறித்த கைத்தொழிலில் விற்பனை செய்யும் நிமித்தம் சில இயந்திராதிகளையும் உற்பத்தி செய்துள்ளது. மிகவும் அதிகளவில் விற்பனையாகிய இயந்திராதிகளிலொன்று பருப்பு வகை தானியங்களின் உமி நீக்கும் இயந்திரமாகும். ஆதலால், 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மூன்று (03) அத்தகைய இயந்திராதிகள் அக்கறையுடைய தரப்புகளுக்கு விநியோகிக்கப்பட்டன.




சமூக, நலன்புரி மற்றும் சமய வழிபாட்டு செயற்பாடுகள்

இந்த நிறுவகம் தனது ஊியர்களுக்கும் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கும் இடையில் உறவுகளையும் மற்றும் நட்பையும் கட்டியெழுப்பும் நோக்கியல் தனது நலன்புரி செயற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. 'தொழிலாளர் தினக்' கொண்டாட்டம் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி நடத்தப்பட்டது. ஊழியர்களினதும் மற்றும் அவர்களின் குடும்பங்களினதும் கூட்டொத்துழைப்புடன் அதே நாள் மாலை நேரத்தில், இந்த நிறுவகத்தினது நலன்புரி சங்கம் 'பக்மஹஉழல' எனும் விளையாட்டு நிகழ்வை ஒழுங்கு செய்தது.

ஊழியர்களின் நீண்டகால சேவையை பாராட்டும் விழாவும் 'தொழிலாளர் தின' நிகழ்வுக்கு இணையாக நடத்தப்பட்டது. இந்த நிறுவகத்திற்கு 25 வருட கால சேவையை வழங்கி பங்களித்த ஊழியர்களுக்கு 50 000.00 ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது.









இந்த நிறுவகம் நெற் சந்தைப்படுத்தல் சபையின் அரிசி பதனிடும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கான வாரிசு நிறுவனமாக 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி தாபிக்கப்பட்டதிலிருந்து 18 ஆண்டுகளை தாண்டியுள்ளது. அந்தத் தருனம் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆம் திகதி வருடாந்த 'சர்வ ராத்திரி பிரித் சஜ்ஜயனய' சமய போதைன ஏற்பாடு செய்யப்பட்டு கொண்டாடப்பட்டது.






நிதி சார்ந்த செயலாற்றுகை

2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2018 ஆம் ஆண்டின் நிதி சார்ந்த செயலாற்றுகை சாதகமான ஒரு மேம்பாட்டை காண்பித்துள்ளது.

ம.வ. அபிவிருத்தி

சகல ஊழியர்களுக்கும் என நிதி திட்டமிடல் மற்றும் அழுத்த முகாமைத்துவம் பற்றிய மூன்று மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.





மனித வளங்கள்

சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஒருவர் பல்கலைக்கழக பதவியணியில் சேரும் நிமித்தம் இந்த நிறுவகத்திலிருந்து பதவி விலகினார். ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஒருவர் இந்த நிறுவகத்திலிருந்து பதவி விலகி தனியார் துறை நிறுவனத்தில் இணைந்தார். இந்த நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி குழுவை மேலும் வலுப்படுத்தும் நிமித்தம் இரண்டு புதிய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களும் மற்றும் ஒரு பொருளியலாளரும் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பொறியியலாளர் மஹேஸ் திஸாநாயக்க
பணிப்பாளர்/பி.நி.அ.

நிதி சார்ந்த முக்கிய குறிப்புகள்

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

ஆராய்ச்சி இந்த NIPHM நிறுவகத்தின் பிரதான செயற்பாடாக விளங்குவதால் அறுவடைக்கு பிற்பட்டகால கைத்தொழிலில் எதிர்நோக்குகின்ற தொழில்நுட்ப பிரச்சினைகளை தீர்ப்பதை நோக்கி இந்த நிறுவகம் பணிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்க, அடிப்படை மற்றும் பிரயோக ஆராய்ச்சி ஆகிய இரண்டு செயற்பாடுகளும் இவற்றில் இரண்டாவதாகக் கூறப்பட்டது பின்னர் ஆராய்ச்சி முயற்சிகளில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினாலும் அந்த இரண்டு வகையான ஆராய்ச்சி செயற்பாடுகளும் அந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டன.

2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில், முப்பத்தி இரண்டு (32) ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவற்றில் 2017 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நிகழ்ந்து வருகின்ற மூன்று (03) ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள் உள்ளடங்கியிருந்தன. பன்னிரெண்டு (12) புதிய ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டன. இவற்றில் மூன்று (03) ஆராய்ச்சிக் கருத் திட்டங்களுக்கு தனியார் துறை மூலம் நிதியிடப்பட்டது. அத்தகைய இரண்டு (2) கருத் திட்டங்களுக்கு இலங்கை தேசிய விவசாய ஆராய்ச்சி மன்றம் (NRC) மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் (NSF) ஆகியவற்றினால் நிதியிடப்பட்டது. மேலும் ஏழு (12) கருத் திட்டங்கள் மாணவர் கருத் திட்டங்களாக செயற்படுத்தப்பட்டன.

அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப துறை அதன் மேம்பாட்டின் நிமித்தம் தனது துறையினுள் புதிய தொழில் நுட்பங்களாக ஆராய்ச்சி முடிவுகளை பரம்பல் செய்வது தவிர, ஆய்வுகளின் முடிவுகள் மீளாய்வுடைய தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகளிலும், இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவகத்தின் அத்தகைய சஞ்சிகைகளிலும் அதே நேரம் வித்தியாசமான பல்கலைக்கழகங்களினால் நடத்தப்பட்ட மாநாடுகளிலும் வெளியிடப்பட்டன.

2017 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நிகழ்ந்து வரும் ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள்

1. உள்நாட்டு ரீதியில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கிடைக்கக்கூடிய மரக்கறிப் பயிர்கள் நிமித்தம் பொருத்தமான குறைந்த வெப்பநிலை களஞ்சிய வசதி பற்றிய மதிப்பீடு
2. ப்ளாஸ்டிக் போத்தல்களிலிருந்து சாப்பிடும் எண்ணெய்களின் பொலிமெர் பெயர்வை கண்டறிந்து அதனை கணியப்படுத்துவதற்கான முறையியல்களை அபிவிருத்தி செய்வதன் மூலமாக உணவு சார்ந்த கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் சாப்பிடும் எண்ணெய்யின் பாதுகாப்புத் தன்மையை உறுதிசெய்தல்.
3. செயற்கை பங்கசு கொல்லிகளுக்கான ஒரு பிரதியீட்டு திறமுறையாக அரிசி உமி சிலிக்கனை பயன்படுத்தி பச்சை மிளகாயின் அறுவடைக்கு முன்-நோய்களையும் மற்றும் அறுவடைக்கு பின்-நோய்களையும் கட்டுப்படுத்துதல்.

201 8 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள்

01. புதிய பழங்களை (பப்பாசி, கொய்யா, அன்னாசி) பழுதடையமல் பாதுகாப்பதற்கான உறைந்து உலர்த்தி வெற்றாக்கி பொதியிடும் தொழில் நுட்பத்தின் பயன்தகு தன்மை பற்றிய மதிப்பீடு
02. அந்திராக்னொஸுக்கான விஷேட குறிப்புடன் மாம் பழத்தின் அறுவடைக்கு பிற்பட்டகால நோயை கட்டுப்படுத்துவதில் சாத்தியமான உயிரியல் கட்டுப்பாட்டு காரணகர்த்தாக்களின் பயன்பாடு
03. இலங்கையின் பாரம்பரிய அரிசி வகைகளினது கடினமான மற்றும் தடிப்பான நார் உணவுப் பதார்த்தங்களின் சாத்தியமான முன்-உயிரியல் தன்மையும் மற்றும் உணவு சார் கைத்தொழிலில் அதன் பிரயோகமும்
04. cv கறுத்தகொலம்பன் மாம் பழத்தின் தோல் ஆயுள் நீடித்தலும் மற்றும் அறுவடைக்கு பிற்பட்டகால தரமும் தொடர்பான முற்-பதனிடுகைகளின் தாக்கம்
05. சாதிக்காய் (*MyristicaSp),* கறுவா (*Cinnamon Zeylanicum)* ஆகியவற்றிலிருந்து பிழிந்து எடுக்கப்படும் எண்ணெய்யை சேர்ப்பதன் மூலமாக உணவு பழுதடையாமல் பாதுகாப்பதற்கான ஒரு உணவு சேர்க்கை பதார்த்ததைத் தயாரித்தல்

06. மாம் பழங்களை பழுதடையாமல் புதிதாக அல்லது குளிராக வைத்திருப்பதற்கான ஒரு குழாய் வடிவ சக்தி வாய்ந்த குளிரூட்டல் சாதனத்தை வடிவமைத்து நிர்மாணித்தல்

07. ஒட்சிசன் எதிர் செயற்பாடுடைய பெறுமதி சேர்க்கப்பட்ட கொட்டை மைய உயர்ந்த தானிய இரும்பு குற்றி சாதனத்தை தயாரித்தல்

08. காய்கறிகளை (கரட்டு, சோயாவரை, பீட்றூட்டு) பழுதடையாமல் உறைநிலை அடையச் செய்து பாதகாப்பதற்கான பதனிடுகை மேம்பாடு

09. தேடிக்காணக்கூடிய தன்மையை மேம்படுத்துவதனூடாக மாம் பழங்கள் விநியோக சங்கிலியை மேம்படுத்துவதற்கான ஜியொபாஷியல் கருவிசாதனங்களை பயன்படுத்துவதற்கான சாத்திய வள பகுப்பாய்வு: ஓமாரகொல்ல மாம் பழங்கள் சேகரிப்போர் குழு அடிப்படையிலான ஓர் சம்பவ ஆய்வு

10. தாமரையின் அறுவடைக்கு பிற்பட்டகால தரமான பாவனை ஆயுளை மேம்படுத்துவதற்கான திறமுறைகளை இனங்கண்டு அபிவிருத்தி செய்தல்

11. பழங்கள் முதிர்ச்சியை இனங்காணும் ஒரு விம்ப அடிப்படையிலான செலவு குறைந்த சாதனத்தை வடிவமைத்து தயாரித்தல்

12. இலங்கையில் களஞ்சியப்படுத்தப்படும் சோளத்தின் களஞ்சிய தரமும் மற்றும் தொற்றுக்கிருமி ஆகியவற்றின் சிற்றனெல்லா புற்களினது சாறுகளின் தாக்கமும்

வெளிக்கள நியிடும் ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள்

1. பழத்தின் பெனொலொஜி மற்றும் பழத்தின் தரம் ஆகியவற்றின் மீது அறுவடைக்கு முற்பட்டகால போலியார் பதனிடுகைகள் மற்றும் எலுமிச்சை பழத்தின் அறுவடைக்கு பிற்பட்டகால ஆயுளை மேம்படச் செய்தல் என்பன தொடர்பான ஆய்வு (*Citrus aurantifoila*Swingle) (NSF/538 மானியத்தின் கீழ் தேசிய விஞ்ஞான மன்றம் நிதியளித்த)

2. எலுமிச்சைப் பழத்தின் அறுடைக்கு பிற்பட்டகால பாவனை ஆயுளை மேம்படுத்த அறுவடைக்கு பிற்பட்டகால பதனிடுகை மற்றும் களஞ்சிய திறைமுறைகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல் (*Citrus aurantifoila*Swingle) 15-154 ஆம் இலக்க மானியத்தின் கீழ் இலங்கை தேசிய ஆராய்ச்சி மன்றம் நிதியளித்த)

தனியார் துறை நிதியிட்ட ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள்

1. TJC மாம் பழத்தையும் ட்ரகென் பழத்தையும் பழுதடையாமல் பாதுகாப்பதற்கான வெடி உறை நிலை தொழில்நுட்பத்தின் பிரயோகம்: இலக்கம் 711/18A, ஜாயா மாவத்தை, கோணவெல எனும் முகவரியில் அமைந்துள்ள சஷீகா எக்ரோ மெனேஜ்மென்ட் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் இந்த ஆராய்ச்சிக் கருத் திட்டத்திற்கு நிதியளித்தது.

2. நெல்லை நீரில் அமிழ்த்தாமல் வர்த்தக அளவில் புழுங்கல் அரிசி உற்பத்தி: கம்சபா மாவத்தை, புளியங்குளம், அனுராதபுரம் எனும் மகவரியில் அமைந்துள்ள 'சந்தரு சஹல்' அரிசி ஆலை இந்தக் கருத் திட்டத்திற்கு நிதியளித்தது.

3. இலங்கையில் களஞ்சியப்படுத்தப்படும் தானியங்களில் பிரதானமாக தொற்றும் பூச்சிகளுக்கு எதிரான அமோர்பவுஸ் சிலிக்கா எனும் பதார்த்தத்தின் பயன்: கொழும்பு 2 எனும் முகவரியில் அமைந்துள்ள செமியொகெம் லங்கா ப்ரைவட் லிமிற்றட் எனும் நிறுவனம் இந்த கருத் திட்டத்திற்கு நிதியளித்தது.

மாணவர் கருத் திட்டங்கள்

இல.	மாணவர்கள்	மேற்பார்வையாளர்கள்	ஆராய்ச்சி தலைப்பு
1	ஆர்.டப்ளியூ.எம்.ஏ.யூ.கே. வாமலுசூரிய	செல்வி அயேஷா ஜயரத்ன கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ஏ. விஜேவர்த்தன	நெல்லியிலிருந்து (*Phyllanthusemblica*) பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் தயாரிப்பும் அவற்றின் தர மதிப்பீடும்
2	கே.டப்ளியூ.என். பிரேமதிலக்க	செல்வி எஸ்.எஸ்.கே. வீரசிங்க கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ஏ.	புதிய எலுமிச்சைப் பழத்தின் (*Citrus aurantifolia*) தோல் ஆயுளை நீடிப்பது தொடர்பான மெருகூட்டல், LDPE பொதியிடுகை மற்றும் களஞ்சியப்படுத்தல் நிலைமைகளின்

		விஜேவர்த்தன	பயன்
3	திருமதி எம்.டீ.ரீ. பெரேரா	கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ஏ. விஜேவர்த்தன	பப்பாசியை (Carica papaya) செயற்கையாக கனியச்செய்வதற்கான ஒரு செயன்முறையை அபிவிருத்தி செய்தல்
4	திருமதி கே.ஜி.என்.எச். குமாரி	கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ஏ. விஜேவர்த்தன	புளி வாழைப் பழத்தை (Musa spp) செயற்கையாக கனியச்செய்வதற்கான ஒரு செயன்முறையை அபிவிருத்தி செய்தல்
5	திருமதி ஜி.எம்.ஏ.எஸ். கலபத்தி	திருமதி டீ.பி. சேனாநாயக்க	பல பயிர்கள் வெப்ப வளி மைய உலர்த்தியை வடிவமைத்து தயாரித்தல்
6	திருமதி ஜே.ஏ.எஸ்.எஸ். ஜயவீர	கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ஏ. விஜேவர்த்தன	உள்நாட்டில் கிடைக்கக்கூடிய பழங்கள், காய்கறி வகைகள் மற்றும் பூ வகைகள் என்பவற்றை பயன்படுத்தி பல போஷாக்கு நிறைந்த உன்னத ஊட்டசக்தியுடைய பானத்தை தயாரித்தல்
7	எம்.பி.டீ.டீ.கே. பண்டார	திரு ரீ.எம்.ஆர். திஸாநாயக்க	தூய மிளகுகளை உலர்த்துவதற்கான IR உதவியுடைய வளி மைய உலர்த்தி சாதனத்தைத் தயாரித்தல்
8	எச்.எம்.வி.பீ.வி.பீ. ஹேரத்	திருமதி சி.ஏ.கே. திஸாநாயக்க	புதிய தூய வெட்டு TJC மாம்பழத்தின் தோல் பாவனை ஆயுளை நீடிப்பதற்கான அஸ்கோர்பிக் மற்றும் அலோயி வெரஜெல் ஆகியவற்றின் பயன்
9	திருமதி ஏ.ஏ.எஸ்.என். லக்மாலி	திருமதி ஆர்.எம்.ஆர்.என்.கே. ரத்நாயக்க	வர்த்தக அளவில் இயற்கையாக கனியவைக்கக்கூடிய காரணகர்த்தாக்கள் பற்றிய மதிப்பீடு
10	திருமதி சி.எம்.சி.சி.வி. சந்திரசேக்கர	திருமதி ஆர்.எம்.ஆர்.என்.கே. ரத்நாயக்க	கரட்டில் (*Daucascarota*) பற்றீரியா நுண்ணங்கி தொற்றி அழுகுவதை கட்டுப்படுத்துவதற்கான அறுவடைக்கு பிற்பட்டகால பதனிடும் முறையாக ஒசோன் பிரயோகம்
11	ஆர்.ஜி.யூ.எஸ். பண்டார	திரு டப்ளியூ.எம்.சி.பீ. வாசல	1 மிதெல் சைக்லோப்ரோபேயின் பிரயோகத்தின் மூலம் TJC மாம் பழத்தின் தோல் பாவனை ஆயுளை நீடிக்கச்செய்தல்
12	திருமதி செரானி பெர்னாந்து	செல்வி ரீ.எம்.ஏ.என். வீரசிங்க	பச்சை மிளகாய்கள் (Capsicum annum) பழுதடையாமல் உறைநிலைப்படுத்தி பாதுகாப்பதற்கான செயன்முறையை அபிவிருத்தி செய்தல்

நிறைவு செய்யப்பட்ட கருத் திட்டங்கள்

1. **செயற்கை பூசண கொல்லிகளுக்கு மாற்று மூலோபாயமாக அரிசி உமி சிலிக்கான் பயன்படுத்தி பச்சை மிளகாயின் அறுவடை கால மற்றும் அறுவடைக்கு பிற்பட்டகால நோய்களைக் கட்டுப்படுத்துதல்**

நோய்களைக் கட்டுப்படுத்துவதில் சிலிக்கெனின் (Si) நன்மை பயக்கும் விளைவுகள் பல தாவர நோயியல் அமைப்புகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. தற்போதைய ஆய்வு, பச்சை மிளகாய்களின் (காப்சிகெம் ஆண்டு I) அறுவடைக்கு பிற்பட்டகால, தரத்தில் கரையக்கூடிய எஸ்ஜ இன் வேர் பயன்பாட்டின் விளைவைக் கண்டறிந்தது. சிலிக்கென் அளவை 200 mgSi / kg மண்ணை அடைய மண் கலவையை திருத்துவதன் மூலம் தாவரங்கள் அரிசி உமி சாம்பல் (RHA) மூலம் சிகிச்சையளிக்கப்பட்டன. சிகிச்சைகள் நான்கு இலை கட்டத்தில் தொடங்கப்பட்டு ஏழு நாட்கள் இடைவெளியில் 28 நாட்கள் வரை தொடர்ந்தன.


ஆர்.எச்.ஏ உடனான மண் திருத்தங்கள் அறுவடைக்கு பிற்பட்டகால நிறை இழப்பைக் கணிசமாகக் குறைத்து, தோல் ஆயுளை 7 நாட்கள் நீட்டித்தன. RHA + ஆலைகளிலிருந்து அறுவடை செய்யப்பட்ட பச்சை மிளகாயிலுள்ள Si பகுப்பாய்வு, நெற்று திசுக்கள் கட்டுப்பாட்டு (RHA-) கலவையில் (0.36% உலர் நிறை) வளர்ந்ததை விட கிட்டத்தட்ட 1.5 மடங்கு சிலிக்கென் (0.54% உலர் நிறை) குவிந்திருப்பது தெரியவந்தது. RHA + தாவரங்களிலிருந்து எடுக்கப்பட்டவை கிளாடோஸ்போரியம் கிளாடோஸ்போரியாய்டுகளுக்கு எதிராக மெல்லிய அடுக்கு நிறமூர்த்தத்தில் (டி.எல்.சி) வலுவான பூஞ்சை காளான் செயல்பாட்டை வெளிப்படுத்தின. டி.எல்.சி தட்டுகளில் பிரிக்கப்பட்ட பழ பெரிகார்பின் மெத்தனாலிக் சாறுகள் Rf 0.17, 0.48 மற்றும் 0.85 என்ற அளவுகளில் மூன்று பூஞ்சை காளான் மண்டலங்களைக் சுட்டிக் காட்டின. RHA + காய்களை பூஞ்சையுடன் சவால் செய்தபோதுதான் Rf 0.48 இல் உள்ள பூஞ்சை காளான் மண்டலம் இருந்தது. எலக்ட்ரான் மைக்ரோகிராஃப்கள் மற்றும் எக்ஸ்ஆர்டி பகுப்பாய்வு இலைகளில் அதிக செறிவுகளில் திரட்டப்பட்ட சிலிக்கான் இருப்பதையும், கட்டுப்பாட்டுடன் (ஆர்.எச்.ஏ-) ஒப்பிடும்போது காய்களில் ஏறக்குறைய ஒத்த அல்லது குறைந்த செறிவுகளையும் வெளிப்படுத்தியது. இந்த முடிவுகள் கரையக்கூடிய Si இன் மண் பயன்பாட்டைப் பயன்படுத்துவதன் மூலம், பச்சை மிளகாயின் அறுவடைக்கு பின் தரத்தை மேம்படுத்தலாம் மற்றும் கட்டுப்பாட்டுடன் ஒப்பிடும்போது 7 நாட்கள் அலமாரியின் ஆயுளை அதிகரிக்க முடியும். ஆர்ஹெச்ஏ கரையக்கூடிய சிலிக்கென் ஒரு நல்ல மூலமாகும், மேலும் இது செயற்கை பூசண கொல்லிகளின் மாற்றுகளுக்கு ஒரு புதிய வழியைக் காண்பிக்கின்றது. மேம்பட்ட அறுவடை பூஞ்சை நோய்க்கிருமிகளுக்கு எதிரான Si- தூண்டப்பட்ட நோய் எதிர்ப்பில் மேம்பட்ட பூஞ்சைக் குழாய் செயல்பாடு சில பங்கைக் கொண்டிருக்கலாம்.


2. பிளாஸ்டிக்கிலிருந்து சமையல் எண்ணெய்களுக்கு பாலிமர் இடம்பெயர்வைக் கண்டறிந்து அளவிடுவதற்கான வழிமுறைகளை உருவாக்குவதன் மூலம் உணவுத் தொழிலில் பயன்படுத்தப்படும் சமையல் எண்ணெயின் பாதுகாப்பை உறுதிசெய்தல்

மேனியோக் சில்லுகள் மற்றும் பிற அதிகமாக வறுத்த கடிகள் போன்ற மிருதுவான தின்பண்டங்களை நுகர்வோரின் தேவை மற்றும் நுகர்வு சமீபத்திய காலங்களில் கணிசமாக அதிகரித்துள்ளது. மிக சமீபத்தில் பல ஊடகங்களும் நுகர்வோர் மிருதுவான சிற்றுண்டி உற்பத்தியாளர்கள் எண்ணெய்களில் மினரல் வாட்டர் போத்தல்களை இணைத்துக்கொள்வதாக புகார் கூறினர், அவை இந்த தின்பண்டங்களை மிருதுவாகவும் நீடித்ததாகவும் ஆக்குவதற்கு அதிகமாக வறுக்கப் பயன்படுகின்றன. இந்த வதந்தி இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடையே விவாதிக்கப்பட்டது, மேலும் அவை ஆதாரங்களுக்கான சரியான அறிவியல் ஆய்வு இல்லாமல் கட்டுக்கதையை நிராகரித்து, புறக்கணித்தன. எனவே, நுகர்வோர் உடல்நலம் மற்றும் பாதுகாப்பைப் பொறுத்தவரை, இந்த ஆய்வு ஒரு முறையை உருவாக்கவும் சரிபார்க்கவும் நடத்தப்பட்டுள்ளது. இது சிக்கலை விஞ்ஞானரீதியாக தீர்ப்பதற்கும், நுகர்வோர் நல்வாழ்வு தொடர்பான ஒழுங்குமுறைகளை வகுப்பதற்கும் தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிவியல் சான்றுகளை வழங்குவதற்கும் காணப்படுகின்ற முறையாகும்.

அதிகமாக வறுத்த தின்பண்டங்களில் டெரெபாலிக் அமிலம் (டிபிஏ) மற்றும் ஐசோப்தாலிக் அமிலம் (ஐபிஏ) ஆகியவற்றைக் கணக்கிட முறையாக நிறுவப்பட்ட முறை எதுவும் இல்லை. சோக்ஸ்லெட் பிரித்தெடுத்தலைப் பயன்படுத்தி அதிகமாக வறுத்த சிப் மாதிரிகளிலிருந்து எண்ணெய்களைப் பிரித்தெடுப்பது, கரைப்பான் பிரித்தெடுப்பதை எளிதாக்க மாதிரிகளை மையப்படுத்துதல், ஹெச்பிஎல்சி மற்றும் எச்.பி.எல்.சி பகுப்பாய்வுகளை டிபிஏ மற்றும் ஐபிஏ தரநிலைத் தொடர்களுடன் சேர்ப்பதற்கு முன் மாதிரி தயாரிப்பாக விளங்குகின்றது. அறிக்கையிடப்பட்ட முறையின் தனித்தன்மை, நேரியல், துல்லியம், மற்றும் அளவீட்டு வரம்பை பகுப்பாய்வு செய்வதன் மூலம் முறை சரிபார்ப்பு செய்யப்பட்டது. 6 பிபிபி, 24 பிபிபி மற்றும் 120 பிபிபி ஆகியவற்றின் டிபிஏ மற்றும் ஐபிஏ குறிப்பு பொருள் செறிவுகளுக்கு சதவீதம் மீட்டெடுப்புகள் 80-120% வரை உள்ளன. எனவே, ஒரு பகுப்பாய்வு செயல்முறையின் சரிபார்ப்பிற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க மதிப்புகளுடன் முடிவுகள் நல்ல உடன்பாட்டில் உள்ளன என்று முடிவு செய்யலாம். TPA மற்றும் IPA க்கான இன்ட்ராடே மதிப்பீடுகள் முறையே உறவினர் தரநிலை விலகல் (RSD) 5.123% மற்றும் 2.015% ஆக வெளிப்படுத்தப்பட்டன, அதே நேரத்தில் TPA மற்றும் IPA ஆகியவற்றுக்கான இடை-நாள் துல்லியமான மதிப்பீடுகள் முறையே நிலையான விலகல் (RSD) 2.089% மற்றும் 2.105% என வெளிப்படுத்தப்பட்டன. தரவு சராசரியைச் சுற்றி இறுக்கமாகக் கொத்தாக இருப்பதைக் குறிக்கிறது. குறித்த முறை ஒரு நல்ல துல்லியத்தை அளிக்கிறது. TPA மற்றும் IPA ஆகியவற்றுக்கான பகுப்பாய்வு வளைவுகள் ஒரு பரந்த செறிவு வரம்பில் (6ppb - 120ppb) நேரியல் என்று கண்டறியப்பட்டது. TPA 0.998 மற்றும் IPA 0.999 ஆகியவற்றுடன் ஒரு தொடர்பு குணகம் உள்ளது. அளவீட்டின் குறைந்த வரம்பு 6 பிபிபி என நிர்ணயிக்கப்பட்டது. ஒப்பீட்டு நிலையான விலகல் 10% வீதத்திற்கும் குறைவாக உள்ளது. மாதிரியில் உள்ள டிபிஏ மற்றும் ஐபிஏ ஆகியவை ஒன்றுடனொன்று பின்னணிப் பிணைந்த நிலையில், எண்ணெயிலிருந்து நன்கு பிரிக்கப்பட்டுள்ளன.

அதிகமாக வறுத்த சில்லுகளில் அதிக துல்லியத்துடன் மற்றும் துல்லியத்துடன் டெரெப்டாஹ்லிகாசிட் மற்றும் ஐசோப்தாலிக் அமிலத்தை பகுப்பாய்வு செய்வதற்கு பொருத்தமான முறையாக இந்த முறைமையில் வழங்கப்பட்ட முறை பயன்படுத்தப்படலாம் என்று ஆய்வு சுட்டிக் காட்டுகிறது.





அதிகமாக வறுத்த மாதிரிகள் மற்றும் ஹெச்பிஎல்சி பகுப்பாய்விலிருந்து எண்ணெய் பிரித்தெடுத்தல்

3. உள்நாட்டில் கிடைக்கும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த காய்கறி பயிர்களுக்கு பொருத்தமான குறைந்த வெப்பநிலை சேமிப்பு நிலைமைகளின் மதிப்பீடு


இலங்கை பல்வேறு வகையான பழ வகைகளையும் மற்றும் காய்கறி வகைகளையும் உற்பத்தி செய்கிறது. அண்மை காலத்தில், பழம் மற்றும் காய்கறி ஆகியன தொடர்பான தொழில் பெரும்பாலும் 50 முதல் 100 கி.மீ சுற்றளவில் அமைந்துள்ள உடனடி நகர்ப்புறங்களின் தேவையை பூர்த்தி செய்யும் கிராமப்புறங்களில் குவிந்துள்ளது. பழங்கள் மற்றும் காய்கறிகள் இயற்கையில் அழிந்து போவதால், புத்துணர்ச்சியை அப்படியே தக்கவைத்துக்கொள்வதற்கும், சில நாட்கள் பழுத்த பிறகும் அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருளாக மாற்றுவதற்கும் சில பாதுகாப்பு நுட்பங்கள் தேவைப்படுகின்றன. அழிந்துபோகும் தன்மையால் உற்பத்தியை தூக்கி எறியும் விலையில் விற்பனை செய்வதற்கு பதிலாக ஒரு சிறந்த விலையை உணர இது விவசாயிக்கு உதவுகிறது. இந்த தேவை குளிர் சேமிப்பு எனப்படும் துணை பூஜ்ஜிய வெப்பநிலைக்கு குறைந்த அல்லது அதற்கு அதிகமான வெப்பநிலையில் இந்த பொருட்களை சேமிக்க முடியும் புதிய எண்ணக்கருவை உருவாக்கியது.

உலகின் மேற்கு மற்றும் ஆசிய பிராந்தியங்களில் அபிவிருத்தி அடைந்த பல நாடுகள், குளிர் சங்கிலியைப் பராமரிப்பதன் மூலம் விநியோகச் சங்கிலி நிர்வாகத்தை மேம்படுத்துதல், தயாரிப்புத் தரம், ஊட்டச்சத்து நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்பைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்தத் துறையில் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டன. இலங்கை பெரும்பாலும் பிற நாடுகளால் உருவாக்கப்பட்ட அறிவைப் பின்பற்றுகிறது. மேலும் இந்த தொழில்நுட்பங்களில் பெரும்பாலானவை அவற்றின் சொந்த பிரச்சினைகள் மற்றும் நிலைமைகளுக்கு தீர்வு காணும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. இது இந்த துறையில் பல தொழில்நுட்ப இடைவெளிகளை உருவாக்குகிறது. இது குறிப்பிடத்தக்க அறுவடைக்கு பிற்பட்டகால இழப்பை ஏற்படுத்துகிறது. ஆகவே, அழிந்துபோகக்கூடிய பொருட்களை முறையாகப் பயன்படுத்துவதற்கு தற்போதைய நிலைமைகளையும் பொருத்தமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதையும் மதிப்பீடு செய்வது மிகவும் முக்கியமாகும். மேலும் இலங்கை பழம் மற்றும் காய்கறி தொடர்பான தொழிலை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தீர்வுகளைக் கண்டறியவும் வேண்டும். கசப்பான குடலிறக்கங்களின் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்பைக் குறைப்பதன் மூலமும், குறைந்த வெப்பநிலை கட்டுப்பாட்டை அறுவடைக்கு பிற்பட்டகால செயன்முறையாக பராமரிப்பதன் மூலமும், ஏற்றுமதி நடைமுறையின் போது கசப்பான குடலிறக்கத்தில் தரமான மற்றும் அளவு பண்புகளை பராமரிக்கவும் இது உதவக்கூடும் என்று இனங்காணப்பட்டது.

குறைந்த டபிள்யு.எல்.பி மற்றும் அதிக டி.சி.சி, குளோரோபில் ஏ மற்றும் பி உள்ளடக்கம், உறுதியானது எனவும் மற்றும் நீட்டிக்கப்பட்ட சேமிப்பக காலத்தின் காரணமாக இலங்கையின் சுற்றுச்சூழல் நிலைமைகளில் கசப்பான குடலிறக்கத்திற்கான உகந்த குளிர் சேமிப்பு வெப்பநிலை 6 ° சி ± 2 எனவும் முடிவுகள் சுட்டிக் காட்டுகின்றன. கெப்சிகெம் 7 ° C ± 2 வெப்பநிலையிலும், 85% RH நிலையில் நிறம் மாற்றாமல் குளிர் சேமிப்பு நிலையில் சேமிக்க முடியும். இருப்பினும் உறுதியான தன்மை, பினோலிக் உள்ளடக்கம் மற்றும் மெழுகு அல்லாத மற்றும் மெழுகு பூசப்பட்ட கெப்சிகெம் இடையே நிறை இழப்பு

ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. தக்காளியை அதன் உடல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகளைப் பாதுகாப்பதன் மூலம் ஒரு மாத காலத்திற்கு 12 ° C ± 2 இன் கீழ் சேமிக்க முடியும்.

4. ஆக்ஸிஜனேற்ற செயல்பாட்டுடன் அதிகரித்த பெறுமதி சேர்க்கப்பட்ட பருப்பு அடிப்படையிலான சிறுமணி பட்டியின் வளர்ச்சி



தயாரிக்கப்பட்ட உற்பத்தி

உடலில் ஃப்ரீ ரேடிக்கல்கள் அதிகமாக உருவாகியதன் விளைவாக, ஹைப்பர் கிளைசீமியாவால் ஆக்ஸிஜனேற்ற மன அழுத்தம், பல உடல்நலப் பிரச்சினைகளை உருவாக்குகிறது. குறிப்பாக, நீண்டகால ஆக்ஸிஜனேற்ற மன அழுத்தம், ஃப்ரீ ரேடிக்கல்களுடன் ஏற்படுகிறது. உடலுக்குள்ளிருக்கும் மிக முக்கியமான திசுக்களுக்கும் மற்றும் உறுப்புகளுக்கும் சேதம் விளைவிப்பதன் மூலம் நீண்ட கால சிக்கல்களை உருவாக்குகிறது. இந்த ஃப்ரீ ரேடிக்கல்களின் தீங்கு விளைவிக்கும் செயலை ஆக்ஸிஜனேற்றிகள் எனப்படும் சில குறிப்பிட்ட வேதியியல் கூறுகளால் கட்டுப்படுத்த முடியும். அவை ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்தையும் அதனுடன் தொடர்புடைய சுகாதார அபாயங்களையும் குறைக்க மிகவும் அவசியமானவையாகும். இயற்கையான பாதுகாப்பு பொறிமுறைக்கு பதிலாக, சிகிச்சை சிபாரிசுகளின் பிரகாரம் உட்கொள்வதன் அல்லது ஆக்ஸிஜனேற்ற நிறைந்த உணவுகளை / உணவுகளை அல்லது அவற்றை கூடுதலாக உண்ணுவதன் மூலமாக உடலில் உள்ள ஆக்ஸிஜனேற்ற திறனை அதிகரிக்க முடியும்.


ஆகையால், ஹைப்பர் கிளைசீமியா காரணமாக ஆக்ஸிஜனேற்ற அழுத்தக் காரணிகளைக் குறைக்கும் நிமித்தம், ஒரு துணை உணவாக, ஆக்ஸிஜனேற்ற செயல்பாடுகளால் உயர்வடைந்த சிறுமணி பட்டியை சாப்பிடத் தயாரான பருப்பு அடிப்படையிலான (பச்சை கிராம்) உருவாக்குவதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும். அதை அடைவதற்காக, ஆரம்பத்தில், மறுக்கப்பட்ட பச்சை தேயிலை பயன்படுத்தி பச்சை தேயிலை பச்சை கிராம் (MI6) மூலம் சிகிச்சையளிக்கப்பட்டது. சிகிச்சையின் முன்னும் பின்னும் ஆக்ஸிஜனேற்ற ஆற்றலின் மாறுபாடுகளை ஆராய்வதன் மூலம் சிகிச்சையின் செயல்திறன் மதிப்பீடு செய்யப்பட்டது. எனவே, ஸ்பெக்ட்ரோஃபோட்டோமெட்ரிக் முறைகளுடன் வெவ்வேறு பயோஆக்டிவிட்டி மதிப்பீடுகளை (டிபிசி, டிஎஃப்சி, ஏபிடிஎஸ், எஃப்ஆர்பி) பயன்படுத்துவதன் மூலம் சிகிச்சையளிக்கப்பட்ட மற்றும் சிகிச்சையளிக்கப்படாத மாதிரிகளின் ஆக்ஸிஜனேற்ற ஆற்றல்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளின்படி, தேயிலை சாறுடன் சிகிச்சையளிக்கப்பட்ட பச்சை கிராம் மாதிரி ஆக்ஸிஜனேற்ற செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு (ப <0.05) காணப்பட்டது. டிபிசி, டிபிபிஹெச் மற்றும் ஏபிடிஎஸ் மதிப்பீடுகளின் அடிப்படையில் காணப்படுகின்றது. இருப்பினும், அதே மாதிரிகளுக்கு TFC மற்றும் FRAP மதிப்பீடுகளுக்கு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவும் இல்லை (p> 0.05). எல்லா நேரங்களிலும், பச்சை கிராம் மாதிரிகளுடன் (சிகிச்சையளிக்கப்பட்ட மற்றும் சிகிச்சையளிக்கப்படாத) ஒப்பிடும்போது தேயிலை சாறு மேலே உள்ள அனைத்து மதிப்பீடுகளுக்கும் கணிசமாக உயர்ந்த (ப <0.05) ஆக்ஸிஜனேற்ற செயல்பாடுகளை சுட்டிக் காட்டுகிறது.

ஆக்ஸிஜனேற்ற செயல்பாட்டை அதிகரிக்க பயன்படுத்தக்கூடிய பயனுள்ள சிகிச்சை அல்லது சிகிச்சை கலவையை கண்டறிந்த பிறகு, இறுதி தயாரிப்பு (சிறுமணி பட்டை) உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் அதன் வைத்திருக்கும் தரம் தீர்மானிக்கப்படுகிறது.

நிகழும் ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள்

1. புதிய பழங்களை (பப்பாளி, அன்னாசி, கொய்யா) பாதுகாப்பதற்காக உறைநிலையில் உலர்த்தல் மற்றும் வெற்றிட பொதி தொழில்நுட்பத்தின் செயல்திறனை மதிப்பீடு செய்தல்.

உறைநிலையில் உலர்த்தல் என்பது மிகக் குறைந்த வெப்பநிலையில் வெற்றிடத்தில் உலர்த்துவதற்கான ஒரு புதிய செயல்முறையாகும். இது நீர் அகற்றும் செயல்முறையாகும், இது பொதுவாக அழிந்துபோகக்கூடிய பொருட்களை அடுக்கு ஆயுளை நீட்டிக்கவும் மருந்துகளை பாதுகாக்கவும் பயன்படுகிறது. பழங்கள் மற்றும் காய்கறிகளை முடக்குவது சுவை, நறுமணம், தோற்றம் மற்றும் ஊட்டச்சத்து மதிப்பை சமரசம் செய்யாமல் அடுக்கு ஆயுளை நீட்டிக்க அனுமதிக்கிறது. உலர்த்தும் இந்த முறை குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் இது பாதுகாக்கப்படுகின்ற உணவின் ஊட்டச்சத்துக்கு மிகக் குறைவான அல்லது சேதத்தை ஏற்படுத்தாது.




கொய்யாவுக்கான கனியவைத்தல் பதனிடுகைகளும் அன்னாசியின் இனங்காணப்பட்ட அனுகூல கனியவைத்தல் கட்டமும்

உயர் தரமான நீரிழப்பு பழ தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கும், பழங்கள் மற்றும் பழுப்பு நிற எதிர்ப்பு காரணகர்த்தாக்களினால் உகந்த பழுக்க வைக்கும் கட்டத்தை அடையாளம் காண்பதற்கும் மிகவும் முக்கியமானதாகும். பப்பாளி (கல்டிவாசு ரெட் லேடி) மற்றும் அன்னாசி கல்டிவாசு மொரீஷியஸின் உகந்த பழுக்க வைக்கும் கட்டத்தை அடையாளம் காணவும், கொய்யா கல்டிவாசு ஆப்பிள் கொய்யாவிற்கான பிரவுனிங் எதிர்ப்பு சிகிச்சையை அடையாளம் காணவும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

நீரிழப்புக்கான பப்பாளி (கல்ட்டிவாசு ரெட் லேடி) உகந்த பழுக்க வைக்கும் நிலை அறுவடைக்கு மூன்று நாட்களுக்குப் பிறகு (பி> 0.05) என்று முடிவுகள் வெளிப்படுத்தின. இந்த கட்டத்தில் தலாம் வண்ண மதிப்புகள் 61.76 ± 1.45 (எல் *), 5.45 ± 0.86 (அ*), 52.58 ± 1.83 (பி *), உறுதியானது 67.80 ± 2.08 என், மொத்த கரையக்கூடிய திட உள்ளடக்கம் 11.13 ± 0.21 மற்றும் பிஹெச் மதிப்பு 4.81 ± 0.22.

அன்னாசி சி.வி.யின் உகந்த பழுக்க வைக்கும் நிலை. நீரிழப்புக்காக நுகர்வோர் ஏற்றுக்கொண்ட மொரீஷியஸ் 75% மஞ்சள் நிற வளர்ச்சியடைந்த கட்டத்தில் (பி <0.05) பழங்கள் ஆகும். இந்த கட்டத்தில் பிரிக்ஸ் மதிப்பு 17.10 ± 0.76, பிஹெச் மதிப்பு 3.67 ± 0.04, டைட்ரேட்டபிள் அமிலத்தன்மை 0.80 ± 0.02, மற்றும் உறுதியானது 12.76 ± 1.13 என். கொய்யா சி.வி.ஆப்பிள் கொய்யாவின் பழுப்பு நிறத்தைத் தடுக்க சிறந்த எதிர்ப்பு பிரவுனிங் சிகிச்சை 0.3% குறைந்தது சிட்ரிக் அமிலக் கரைசலை 10 நிமிடங்கள் தொடர்ந்து 60 டிகிரி செல்சியஸில் 2 நிமிடங்கள் வெளுக்கவும். சிட்ரிக் அமிலத்தில் நீராடாமல் 60 நிமிடங்களுக்கு 2 நிமிடங்களுக்கு சிகிச்சையளிப்பது திருப்திகரமான முடிவுகளை சுட்டிக் காட்டியது.




பப்பாசியின் இனங்காணப்பட்ட அனுகூல கனியவைத்தல் கட்டம்

2. மாம்பழத்தின் அறுவடைக்கு பிற்பட்டகால நோய்களைக் கட்டுப்படுத்துவதில் சாத்தியமான உயிரியல் கட்டுப்பாட்டு காரணகர்த்தாக்களின் பயன்பாடு

பழங்களிலும் மற்றும் காய்கறிகளிலும் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளுக்கு ஒரு முக்கிய காரணம் பூச்சி மற்றும் நோய் பிரச்சினைகள் அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் கட்டத்தில் ஏற்படுவதாகும். பொருளாதாரம் மற்றும் உலகலாவிய ரீதியில் வறுமை அதிகரித்தல் ஆகிய சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, அறுவடைக்கு பிற்பட்டகால நோய்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வது அவசியமாகும். மேலும் நோய்க்கிருமிகளினால் நிகழும் அறுவடைக்கு பிற்பட்டகால நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான பொதுவான வழி செயற்கை பூசண கொல்லிகளைப் பயன்படுத்துவதாகும். எவ்வாறாயினும், உணவுப் பாதுகாப்பு குறித்த அதிகரித்துவரும் கருத்தில் செயற்கை பூஞ்சைக் கொல்லிகளைப் பயன்படுத்துவது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. இதனால் இந்த நோய்களைக் கட்டுப்படுத்த மாற்று வழிமுறைகளை உருவாக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

எனவே, இந்த ஆய்வின் ஒட்டுமொத்த நோக்கம் மாம்பழத்தில் காணப்படும் ஆந்த்ராக்னோஸ் நோய்க்கு சிறப்பு குறிப்புடன் பழங்களின் அறுவடை நோய்களைக் கட்டுப்படுத்த புதிய நுண்ணுயிர் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை (பி.சி.ஏ) கண்டறிவதாகும். இந்த பி.சி.ஏக்கள் பழங்களின் அறுவடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான வணிக பயன்பாடுகளுக்கான சூத்திரங்களில் மேலும் பயன்படுத்தப்படலாம். குறிப்பாக மாம்பழம் செயற்கை இரசாயனப் பதார்த்தங்களை விட குறைந்த விலைகளைக் கொண்டதாகும்.


இது ஒரு இரண்டு வருடக் கருத் திட்டமாகும். முதல் ஆண்டில் ஆய்வுக்கு தேவையான இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் நிமித்தம் கொள்வனவு சார்ந்த நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் சில ஆரம்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆந்த்ராக்னோஸை ஏற்படுத்துவதற்கு காரணமான நோய்க்கிருமி/கள் தனிமைப்படுத்தப்பட்டு உருவவியல் ரீதியாக அடையாளம் காணப்பட்டுள்ளன. நோய்க்கிருமிகளின் உறுதிப்படுத்தல் கோச்சின் போஸ்டுலேட்டுகள் மற்றும் மூலக்கூறு அடையாளத்தைப் பயன்படுத்தி செய்யப்படும், நோய்க்கிருமிகளின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான இரண்டு வருடக் கருத் திட்டமும் திட்டமிடப்பட்டுள்ளது. இயற்கையான சூழலில் இருக்கும் சாத்தியமான எதிர்தாக்க நுண்ணுயிரிகளை தனிமைப்படுத்தல் விடயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவை எதிர்தாக்க ஆந்த்ராக்னோஸ் நோய்க்கிருமிகளுக்கு எதிராக சோதிக்கப்படும். இறுதியாக, ஒரு உயிர் பூச்சிக்கொல்லியை உருவாக்குவதில் பயனுள்ள எதிர்தாக்க பட்சிகள் பயன்படுத்தப்படும்.



தூ ய சி.க்ளொஸ்பொரியொடெஸ வளர்ப்பு (மேலே) மற்றும் பழுதடைந்த பழம் (கீழே)

3. இலங்கையின் பாரம்பரிய அரிசி இனங்களின் தடுப்பு மாவுச்சத்துக்கள் மற்றும் உணவு இழைகளின் ப்ரீபயாடிக் திறன் மற்றும் உணவுத் தொழிலில் அதன் பயன்பாடு


இலங்கையில், கடந்த காலங்களில் ஏறக்குறைய 2000 பாரம்பரிய நெல் இனங்கள் பயிரிட்டுள்ளன. இப்போதெல்லாம் சந்தையில் சுவாண்டெல், களுஹீனாட்டி போன்ற சில முக்கிய பாரம்பரிய அரிசி இனங்களை நாம் காணலாம். தடுப்பு மாவுச்சத்து (RS) மற்றும் ஜீரணிக்கச்செய்யும் நார்பதார்த்தங்கள் என்பன மனித சிறுகுடல் ஜீரணத்திற்கு அப்பால்பட்ட மாவுச்சத்துக்களாகும். இப்போதெல்லாம், பெரும்பாலான உணவு விஞ்ஞானிகள் புரோபயாடிக்குகள் மற்றும் ப்ரீபயாடிக்குகளின் ஆரோக்கிய நன்மைகளில் கவனம் செலுத்துகின்றனர். ப்ரிபயாடிக்குகளைப் போலவே மனித வயிற்றிலும் எதிர்ப்பு ஸ்டார்ச் ஜீரணிக்க முடியாதது. எனவே பாரம்பரிய அரிசி இனங்கள் மனிதர்களுக்கு DF மற்றும் RS ஆகியவற்றை வழங்குவதற்கான ஒரு வாகனமாக தொழிற்பட முடியும். மேலும் அவற்றின் ஃபைபர் பாகத்தில் ஒரு ப்ரீபயாடிக் திறனைக் கொண்டிருப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இலங்கையில் உள்ள பாரம்பரிய அரிசி இனங்களின் எதிர்ப்பு மாவுச்சத்துக்கள் மற்றும் உணவு இழைகளின் ப்ரீபயொட்டிக் மற்றும் உணவுத் தொழிலில் அதன் பயன்பாடு என்பவற்றை நிர்ணயிப்பது இந்த ஆய்வின் பொதுவான நோக்கமாகும்.



ஆரம்பத்தில் சுவந்தேல், களுஹீனாட்டி, பச்சபெருமால், குருலுத்துட மற்றும் நீரோகா அரிசி இனங்களின் நெல் மாதிரிகள் பதலகொட அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திலிருந்து சேகரிக்கப்பட்டன. பி.ஜி 358 கட்டுப்பாட்டு மாதிரியாக பயன்படுத்தப்பட்டது. பின்னர் உணவு நார்ச்சத்து உள்ளடக்கம் AOAC முறை 2009.01 மற்றும் 2011.25 வழியாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. பி.ஜி 358, சுவாண்டெல், களுஹீனாட்டி, பச்சபெருமால், குருலுத்துட மற்றும் நீரோகா ஆகியவற்றின் 100 கிராம் பழுப்பு அரிசிக்கான உணவு இழை மதிப்பு முறையே 4.2%, 6.4%, 6.8%, 6.6%, 6.6% மற்றும் 5.3% என்ற அளவுகளில் காணப்பட்டது. எதிர்ப்பு ஸ்டார்ச் பகுப்பாய்வு இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



நுண்ணுயிர் ஆய்வுகளில், பூர்வாங்க ஆய்வாக அரிசி மாவைப் பயன்படுத்தி நடுத்தரளவான திசு தயாரிக்கப்பட்டது. லாக்டோபாகிலஸ் பிளாண்டாரம்ப்ரோபயாடிக் திசு, குறித்த திசுவில் செலுத்தப்பட்டது. சிப்ரோஃப்ளோக்சசின் ஆண்டிபயாடிக் மற்ற லாக்டிக் அமில பாக்டீரியாக்களுக்கான கட்டுப்பாட்டு இரசாயன்ப பதார்த்தமாக பயன்படுத்தப்பட்டது. மேலும் இது எல். ப்ளாண்டாராம் இனங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ச்சியை எளிதாக்கும். 62 கிராம் எம்.ஆர்.எஸ் அகாரை 20 கிராம் அரிசி மாவுடன் சேர்த்து 5 மில்லிகிராம் சிப்ரோஃப்ளோக்சசின் சேர்த்து திசுவினால் தயாரிக்கப்பட்டது. பின்னர் கலவை, 1 லிட்டர் காய்ச்சி வடிகட்டிய நீரில் கரைக்கப்பட்டது.



எதிர்ப்பு ஸ்டார்ச் உள்ளடக்கத்தின் பகுப்பாய்வு, சி.எஃப்.யூ மதிப்புகளைப் பயன்படுத்தி ப்ரீபயாடிக் செயல்பாட்டு மதிப்பெண்ணைக் கணக்கிடும் நிமித்தம் புளித்த அரிசி இட்லியின் வளர்ச்சி, சுவை மதிப்பீடு, புள்ளிவிவர பகுப்பாய்வு மற்றும் அறிக்கை சமர்ப்பிப்பு ஆகியவை 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

4. cv. கரத்தகொலம்பான் மாம் பழத்தின் தோல் ஆயுளை நீடித்தல் மற்றும் அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் அதன் தரம் என்பவற்றில் முன்கூட்டிய பதனிடுகைகளிலுள்ள தாக்கம்

மா *(Mangifera indica* L.) உலகத்தின் உலர் வலயங்களினதும், உப உலர் வலயங்களினதும் ஒரு பிரதான பழப் பயிராகும். குறிப்பாக மா ஆசிய பிராந்தியத்தினதும் ஒரு பிரதான பழப் பயிராக விளங்குகின்றது. அதிகளவு போஷாக்கு பெறுமானமுடைய சுவை, சாறுத்தன்மை, இனிப்பு, நறுமணம், நிறம், பிரத்தியேகமான சுவை என்பன கறுத்தகொலம்பான் மாம் பழத்தை உலகளவில் பிரபல்லியமடையச் செய்துள்ளன. விரைவில் கனியவைக்கும் முறை மாம் பழத்தின் குறுகிய கால தோல் ஆயுளுக்கு பொறுப்புக்கூற வேண்டியதாகும். இந்த முறையானது வினைத்திறன் வாய்ந்த கையாளுகை மற்றும் எடுத்துச்செல்லல் முதலிய செயற்பாடுகளில் கடுமையான மட்டுப்பாடுகளை திணிக்கின்றது. ஆகையால். மாம் பழத்தை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான நுட்பங்கள் நியமப்படுத்தப்பட்டு, களஞ்சிய ஆயுள் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

இயற்கையான உற்பத்திகள் பழங்களை கனியவைக்கும் தாமத்திற்கும், அறுவடைக்கு பிற்பட்டகால அழிவுகளை குறைப்பதற்குமான ஒரு பிரதியீட்டு அணுகலாக நிகழ்கின்றன. சாப்பிடக்கக்கூடிய மெழுகுப் பதார்த்தங்கள் ஒரு தடையாக தொழிற்பட்டு, பழங்களுக்கும் மற்றும் சுற்றுச்சூழல் வளிமண்டலத்திற்கும் இடையிலுள்ள வாயு பரிமாற்றத்தை குறைத்து, உள்ளக ரீதியில் மாற்றமடையும் வளிமண்டல நிலைக்கும் (அதிகளவு CO2 மற்றும் குறைந்தளவு O2) அதே போல் குறைந்தளவான நீர் இழப்புக்கும் பயனாக அமையும். சாப்பிடக்கூடிய மெழுகு பதார்த்தங்கள் பழங்களின் தரத்தை பேணுவதற்கும் மற்றும் உயிரியல் ரீதியில் அழியாத பொதியிடும் மூலப்பொருட்களின் அளவை குறைப்பதற்கும் ஒரு அறுவடைக்கு பிற்பட்டகால கட்டுப்பாட்டு சாதனமாக பயன்படுத்தப்படுகின்றன. கொழுப்பு மைய சாப்பிடக்கக்கூடிய மெழுகிடும் (மெழுகு) பதார்த்தம் IPHT நிறுவகத்தினால் (IPHT உயிரியல் மெழுகு பதார்த்தம்) தயாரிக்கப்பட்டது. இந்த பதார்த்தம் புதிய பழங்களின் தரம் கெடாமல் அவற்றின் தோல் ஆயுளை நீடிக்க முடியும் என கண்டறியப்பட்டுள்ளது.


அராபிய பசை என்பது அகஷியா இனங்களிலிருந்து கிடைக்கும் இயற்கையான ஒரு பொலிசக்சாரைட்டு பசையாகும். இது பழ உற்பத்திகளில் சுருளை உருவாக்குதல், எமல்சிபிகேஷன் செய்தல் மற்றும் என்கெப்சியுலேஷன் செய்தல் ஆகிய நோக்கங்களின் நிமித்தம் பயன்படுத்தப்படுகின்றது. சிற்றோஷன் என்பது நச்சுத்தன்மையற்ற, உயிரியல் ரீதியில் அழியக்கூடிய, உயிரியல் தொழிற்பாடுடைய, உயிரியல் ரீதியில் பொருத்தமான ஒரு கலவையாகும். இந்தக் கலவைகளை கொதித்து கொதி தணிந்த நீர் கலந்த கட்டமைந்த மெழுகிடும் கரைசல்களில் அமிழ்த்தி பழங்களுக்கு இலகுவாக பிரயோகிக்கலாம்.

ஆகையால், IPHT உயிரியல் மெழுகு பதார்த்தம், சிற்றோஷன் மெழுகிடும் பதார்த்தம், மெழுகிடும் அராபிய பசை என்பவற்றை பிரயோகிக்கும் செயன்முறை, விவசாயிகளினதும் மற்றும் தொழில்முயற்சியாளர்களினதும் சிறந்த வாழ்க்கைக்கு வழிவகுக்கின்ற அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைத்தல் அடங்கலாக தரமான ஒரு நுகர்வுப் பொருளை வழங்குவதற்கும் மற்றும் விவசாய வணிகங்களுக்கும் இலாபத்தை அனுகூலப்படுத்துவதற்கும் மிகவும் இன்றியமையாததாகும்.

இந்தப் பின்னணியில், அதிகளவு உற்பத்தி கலத்தில் சந்தை மிகையை அடைந்து கணிசமான விலை குறைவுக்கு காரணமாக அமையும் நிலையை வெற்றிகொள்ளும் நிமித்தம், கரத்தகொலம்பான் cv.மாம் பழத்தின் களஞ்சிய காலத்திலும், தரத்திலும் அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் பதனிட்டு பாதுகாக்கும் பதார்த்தங்களான IPHT உயிரியல் மெழுகு, சிற்றோஷன், அராபிய பசை என்பவற்றை பிரயோகிப்பதிலுள்ள பலன்களை ஆய்வு செய்வதில் உத்தேச பணி இலக்குக்கொள்கின்றது.




ஆய்வை நடத்துதல்



மெழுகிட்டு பதனிடப்பட்டதும்
பதனிடப்படாததுமான பழங்கள்


5. சாதிக்காய் (*Myristica Sp.*) எண்ணெய்யையும் மற்றும் கறுவா (*Cinnamon Zeylanicum*) எண்ணெய்யையும் ஒன்றாக கலந்து உணவுப் பொருட்களை பழுதடையாமல் பாதுகாப்பதற்கான ஒரு உணவு கலப்பு பதார்த்தத்தை தயாரித்தல்



நுண்ணங்கி எதிர்காரணகர்த்தாக்கள் பற்றீரியாவினதும் பங்கஸினதும் வளர்ச்சியை தடைசெய்து, உணவு உற்பத்தித் தொழிலில் தயாரித்த உணவுப் பொருட்களை பாதுகாப்பதற்கு மிகவும் முக்கியமானவையாகும். சோடியம் பென்ஷோட்டுதான் மிகவும் பரந்தளவில் பயன்படுத்தப்படும் ஒரு நுண்ணங்கி எதிர்-செயற்கை கலவையாகும். சோடியம் பென்ஷோட்டு என்பது நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டை மிகக்குறைந்த அளவுக்கு ஆக்கக்கூடிய ஒரு இரசாயன பதார்த்தமாகும். எனினும், மக்களுக்கு ஒவ்வாத சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும், உணவில் சோடியம் பென்ஷோட்டு பயன்படுத்துவதால் அநேகமான மக்கள் ஆஸ்த்மா போன்ற நோய்களினால் அவதிப்படுவதாகவும் ஆராய்ச்சியின் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. கறுவா அத்தியாவசிய எண்ணெய்யில் உலர்ந்த கறுவா அளவும், இயுக்னொல் அளவும் அதிகளவில் உள்ளடங்கியிருக்கின்றன. இவைதான் கறுவா எண்ணெய்யிலுள்ள பிரதான கூறுகளாகும். உலர்ந்த கறுவாவும், இயுக்னொலும் அதிகளவு நுண்ணங்கி எதிர்தாக்கங்களுடையவை என்பதை நிறூபித்துள்ளன.


உணவுப் பொருட்களை பழுதடையாமல் பாதுகாக்கும் சில செயற்கை பதார்த்தங்களுக்கு பிரதியீடாக அத்தகைய பொருட்களை பழுதடையாமல் பாதுகாக்கும் இயற்கையான ஒரு பதார்த்தத்தை கண்டறிவது இந்த ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

ஆரம்பத்தில், தக்காளி சோஸ் ஒரு உணவு உற்பத்தியாக தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் புதிதாக தயாரிக்கப்பட்ட தக்காளி சோஸ் உற்பத்தியை இந்த எண்ணெய்களினால் தனித்தனியாக பதனிட்டதன் மூலம், கறுவா பட்டை எண்ணெய், கறுவா இலை எண்ணெய், சாதிக்காய் எண்ணெய் முதலிய எண்ணெய் வகைகளின் நுண்ணங்கி எதிர்சக்தி சாத்தியத்தின் நிமித்தம் பிரிசீலிக்கப்பட்டது. சுவையுணர்வு பற்றிய ஒரு மதிப்பீட்டினூடாக, இந்த வாசனை எண்ணெய்களின் 0.05% செறிவு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதுவே தக்காளி சோஸ் உற்பத்தியை பதனிட்டுப் பாதுகாப்பதற்கான மிகச்சிறந்த இணைப்பு கலவையாகும்.




இந்த ஆய்வு 2 வருட ஆராய்ச்சியாகும். 2018 ஆம் ஆண்டு இறுதியில், இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் நுண்ணங்கிகளை எதிர்க்கும் அதிகளவான சாத்தியத்தின் நிமித்தம் சாதகமான ஒரு பெறுபேறை காண்பித்துள்ளன. இந்த வாசனை எண்ணெய்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட உணவு சேர்க்கையைக் கொண்டு பதனிட்டு களஞ்சியப்படுத்தப்பட்ட தக்காளி சோஸ் உற்பத்தியின் நிமித்தம் ஒரு தோல் ஆயுள் பகுப்பாய்வை மேற்கொள்வதற்காக 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில், இது திட்டமிடப்பட்டது.

7. மரக்கறி வகைகளை (கரட்டு, போஞ்சி, பீற்றூட்டு) பழுதடையாமல் உறைநிலையில் பாதுகாப்பதற்கான பதனிடுகை மேம்பாடு







மரக்கறி வகைகள் அதிகளவு உற்பத்தியாகும் காலப் பகுதிகளில் அறுவடைக்கு பிற்பட்டகால கணிசமான இழப்புகள் இலங்கையில் பிரமாண்டமான அளவுக்கு பிரச்சினையாக மாறியுள்ளன. ஆதலால் எமது நாடு கடந்த காலத்திலிருந்து இன்றும் கூட மரக்கறிப் பிரிவில் ஏறக்குறைய 30-40% அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை அனுபவித்து வருகின்றது. ஏற்கெனவேயிருக்கின்ற விநியோக சங்கிலிக்கும் மற்றும் மரக்கறி வகைகளுக்கான கேள்விக்கும் இடையில் ஒரு 'மிகையாக' உருவாகுகின்ற சமமின்மை அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளுக்கு பிரதான காரணமாக விளங்குகின்றது. இலாபத்தை பெறுகின்ற எண்ணத்தில் சில தரப்புகள், நுகர்வோரின் கேள்வியை உருவாக்கியதன் பின்னர் அறுவடைக்கு பிற்பட்டகால அதிகளவு இழப்பை அனுபவிக்கச்செய்யக்கூடிய ஆபத்திருக்கின்ற உணவுப் பொருட்களை பாதுகாப்பதில் விருப்பத்துடன் ஈடுபட்டாலும், அநேகமாக பாரியளவான, நடுத்தரளவான விவசாயிகள், வியாபாரிகள் ஆகியோர் மேற்குறித்த பிரச்சினை பற்றி கவலைப்படுவதில்லை. வெளித் தரப்பிடமிருந்து கிடைக்கும் தொழில்நுட்ப மற்றும் இயந்திர உதவிகள் குறைவாக காணப்படுவதால் அந்தத் தரப்புகளின் தொழில்களில் தொழில்நுட்ப அம்சங்களை ஈடுபடுத்துவதில் அவற்றுக்கு இருக்கின்ற இயலாமை அதற்கான காரணமாகும். எனினும், சொற்பளவான தனிநபர்கள் பழுதடையாமல் பாதுகாப்பதற்கான பல நுட்பங்களை பிரயோகித்து மரக்கறி வகைகளை ஏற்றுமதி செய்கின்றனர்.

இந்த விடயங்களில் கவனம் செலுத்தியதாலும் மற்றும் அனுராதபுரத்தில் அமைந்துள்ள அறுவடைக்கு பின்-தேசிய முகாமைத்துவ நிறுவகம் நடத்திய அக்கறையுடைய தரப்பு கூட்டங்களினூடாக அந்த அக்கறையுடைய தரப்புகளிடமிருந்து கிடைத்த கோரல்கள் கருத்திற் கொள்ளப்பட்டதாலும், உறைநிலை மரக்கறி உற்பத்தித் தொழில் வெளிநாடுகளில் கணிசமான சந்தை வாய்ப்புகளை கொண்டிருத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தியையும், மக்களின் சுறுப்பான வாழ்க்கைப்பாணியையும் கொண்டு, உறைநிலை மரக்கறி உற்பத்தித் தொழிலை மேலும் வியாபிப்பதற்கான சாத்தியம் காணப்படுதல் ஆகிய காரணங்களினால் உறைநிலை மரக்கறி வகைகள் (கரட்டு, சோயா, பீற்றூற்று) பழுதடையாமல் பாதுகாப்பதற்கான பதனிடும் மேம்பாடு பற்றிய ஒரு ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சிக் கருத் திட்டம் மரக்கறி வகைகளுக்கான ஒரு பெறுமதி சேர்த்தல் வடிவத்தை இனங்காணுதல், பதனிடும் வழியலகுகளை அனுகூலமாக்கல், உறைநிலை களஞ்சியத்தின் கீழ் மரக்கறி வகைகளின் தரத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் போஷாக்கு, சுவை, பௌதீக பண்புகளை பாதுகாக்கும் அம்சத்தை உறுதிசெய்தல் ஆகிய விடயங்களில் ஒருமுகப்படும் வகையில் 1.5 வருடத்திற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கரட்டு, சோயா, பீற்றூட்டு என்பவற்றின் வெடி உறைநிலைக்கான சிறந்த முன்கூட்டிய பதனிடும் இணைப்புகளை கண்டறியும் நிமித்தம் தற்பொழுது பூர்வாங்க ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. பதனிடப்பட்ட மரக்கறி வகைகளின் இரசாயன, பௌதீக, உயரியல் பண்புகளும், சுவை சார்ந்த பண்புகளும் சற்று உறைந்த பின்னர் மதிப்பிடப்படுகின்றன. உறைந்த மரக்கறி

வகைகளையும் மற்றும் முடிவு உற்பத்திகளையும் மூன்று மாத காலத்திற்கு 18°C வெப்பநிலையில் உறைந்த மரக்கறி வகைகள் களஞ்சியப்படுத்தப்பட்டதன் பின்னர் மேற்குறித்த வழியலகுகள் அளவிடப்படும்.

இந்த ஆய்வுகளினூடாக சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், வெடி உறை நடைமுறை தயாரிக்கப் பட்டு பின்பற்றப்படும். இந்த ஆராய்ச்சிக் கருத் திட்டம் அழியக்கூடிய உணவு உற்பத்தி கைத்தொழிலில் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்து, தரத்தில் உயர்ந்த உறைந்த உற்பத்திகள் சந்தைக்கு கிடைக்கும் சாத்தியத்தை அதிகரிக்கும் அதே வேளையில் பல்லினத்துவம் வாய்ந்த தரமான உற்பத்திகளின் நிமித்தம் நுகர்வோருக்கு இருக்கின்ற அணுகலையும் மற்றும் உற்பத்தி வர்த்தகமயமாதலையும் உறுதிசெய்து அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைக்க உதவும்.

8. தேடிக்காண் வசதியை மேம்படுத்துவதனூடாக மாம் பழ விநியோக சங்கிலியை மேம்படுத்தும் நிமித்தம் ஜியோபாஷல் கருவிசாதனத்தை பயன்படுத்துவது பற்றிய சாத்தியவள பகுப்பாய்வு: ஓமாரகொல்ல மாம் பழம் சேகரிப்போர் குழுவை அடிப்படையாகக் கொண்ட ஓர் சம்பவ ஆய்வு

வினைத்திறன் வாய்ந்த மாம் பழ விநியோக சங்கிலியின் நிமித்தம் உயர் தொழில்நுட்பமுடைய ஜியோபாஷல் கருவிசாதனம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஜியோ-தேடிக்காண் எண்ணக்கரு, உற்பத்தி நகர்வுகளின் GPS அமைவிட ஸ்தலம் உள்ளடங்கிய புதிய தேடிக்காண் முறைமையின் நிமித்தம் ஒரு குறைநிரப்பியாக பயன்படுத்தப்படுகின்றது. பழங்களினதும் மற்றும் மரக்கறி வகைகளினதும் விநியோக சங்கிலிகளை கருத்திற் கொள்கின்ற போது, அத்தகைய பழங்களினதும் மரக்கறி வகைகளினதும் GPS அமைவிட ஸ்தலத்தை தேடிக்காணும் வசதியானது விநியோக சங்கிலி நகர்வுகளை விரைவுபடுத்துவதன் மூலம் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைத்து, தேவையற்ற நகர்வுகளை தவிர்த்து, எடுத்துச் செல்லல் நடவடிக்கையில் நிகழும் தாமதங்களை குறைத்து விநியோக சங்கிலியை பயனுள்ளதாக முகாமை செய்வதற்கு வசதியளிக்கும். இறுதியாக, அது நுகர்வோருக்கு கிடைக்கின்ற பழங்களின் தரத்தை மேம்படுத்தி, சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் கிடைக்கும் பொருளாதார நன்மைகளை அதிகரிக்க செய்யும். ஆகையால், பழங்களினதும் மரக்கறி வகையினதும் விநியோக சங்கிலி ஜியோ தேடிக்காண் வசதியை மேம்படுத்துவதற்கு விஷேடமாக ஜியோபாஷல் கருவிசாதனத்தின் சாத்தியம் பற்றி ஆராயும் பொருட்டு இந்த ஆராய்ச்சி நடத்தப்படுகின்றது. இது ஒரு இரண்டு வருட கால ஆராய்ச்சியாகும். இந்த ஆராய்ச்சி தற்பொழுது ஓமாரகொல்ல மாம் பழம் சேகரிக்கும் தரப்புகளுடன் இணைந்த பழ விநியோக சங்கிலியின் அடிப்படையிலான ஒரு சம்பவ ஆய்வாக நடத்தப்படு வருகின்றது. இந்த அறிக்கை 2018 ஆம் ஆண்டு கலப் பகுதியில் அடைந்த முன்னேற்றத்தை சுருக்கமாக விவரிக்கின்றது.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள், விரிவான ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆலோசனை சேவையாக GPS வாங்கு கருவி, மொபைல் காண் மென்பாகம் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டன. கள விஜயங்கள் மற்றும் நேர்காணல் என்பவற்றின் ஊடாக சம்பவ ஆய்வு தொடர்பான விநியோக சங்கிலியை தேர்ந்தெடுக்கும் அம்சம் நிறைவேற்றப்பட்டது. சீப்புக்குளம், கல்குளம், கலேவெல ஆகிய பிரதேசங்களிலிருந்து பழத் தோட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஓமாரகொல்ல மாம் பழம் பதனிடும் வலயத்திலிருந்து இரண்டு மாம் பழம் சேகரிக்கும் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. கீல்ஸ் சேகரிப்பு நிலையம் ஒரு சுப்பர் மார்கெட்டாக தேர்ந்தெடுக்கப்பட்டது. மெனிங் சந்தையிலிருந்து மொத்த வியாபாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பன்னிப்பிட்டிய, கேஸ் பஹா, நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் சில்லறை விற்பனைத் தரப்புகள் நிலைகொள்ளச்செய்யப்பட்டன.


ஒரு GPS மதிப்பாய்வை நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோக சங்கிலியுடன் தொடர்புடைய நிறுவனங்கள் சம்பந்தமான ஒரு புவியல்-தரவுத்தளம் தயாரிக்கப்பட்டது. இணையத்தள பிரயோகம் மற்றும் மொபைல் பிரயோகம் ஆகிய இரண்டு முறைமைகள் கொள்வனவு செய்யப்பட்ட மேன்பாக வசதியில் உள்ளடங்குகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோக சங்கிலி தரப்புகளுக்கு சொந்தமான அன்ட்ரொய் தொலைபேசிகளின் நிமித்தம் மொபைல் பிரயோக வசதி நிறுவப்பட்டது. தொழிற்பாட்டை இனங்காணும் நிமித்தம் தற்பொழுது குறித்த மொபைல் பிரயோக வசதி பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. சில மேம்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேடிக்காணும் வசதியை சனவரி மாதத்தினுள் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மொபைல் காண்வசதி 5 நிமிடங்களுக்கு இடைப்பட்ட நேர இடைவளிகளில் GPS ஸ்தல தகவல்களை வழங்கும். ஆகையால், இது குறித்த செயல் நிகழும் நாளின் நேரம், தேவையற்ற தாமதங்கள், தேவையற்ற நகர்வுகள், தேவையற்ற பிரயாண தூரங்கள் என்பவற்றை கண்டறிவதற்கு உதவும்.



விநியோக சங்கிலியின் வித்தியாசமான புள்ளிகளில் தரவுகள் சேகரிப்பு

9. தூய்மையான புதிய மாம் பழத்தை குளிராக்கி பழுதடையாமல் பாதுகாப்பதற்கான ஒரு சுரங்கவழி வடிவில் வலிமையான எயார் கூலர் சாதனத்தை வடிவமைத்து நிர்மாணித்தல்

தூய பழங்களும் மற்றும் மரக்கறி வகைகளும் ஆரோக்கியமான போஷாக்கு நிறைந்த ஒரு உணவின் மிக முக்கியமான தேவையான ஒரு பாகமாகும். பிரதானமாக **20** எண்ணிக்கைக்கும் அதிகளவு வித்தியாசமான விற்றமின்களும், கனியுப்புக்களும், நார் சத்தும் பொலி-பெனொலிக் ப்லவனைட்டும், என்டிஒட்சிடென்ட் கலவைகளும் உள்ளடங்குகின்றன. மேலும், மாம் பழம் கொழுப்பற்ற, சோடியமற்ற, குளோஸ்ட்ரோலற்ற பழமாகும். இலங்கையில், மாம் பழத்தின் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளின் அளவு அண்ணளவாக 30 முதல் 35% வீதம் வரை [எம். தந்திரிகே et. al., 1993]. காணப்படுகின்றது. ஆகையால், தூய மாம் பழத்தின் தரத்தையும் பாதுகாப்பை மேம்படுத்துவதும் அதே போல் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைப்பதும் முக்கியமானதாகும். ஆதலால் இலங்கையில் சந்தைப்படுத்தல் மிகையையும் அதே போல் சந்தைப்படுத்தலில் ஆண்டு முழுதிலும் நிலவும் விலை ஏற்றத்தாழ்வுகளையும் வெற்றிகொள்ள முடியும்.



வெப்பநிலையே மிக முக்கியமான காரணியாகும். இந்த வெப்பநிலை தூய பழங்களின் தரத்திலும் களஞ்சிய ஆயுள் காலத்திலும் தாக்கம் செலுத்துகின்றது. அறுவடை செய்யப்பட்டவுடனே துரித ஒரேமாதிரியான குளிர்முறைமை வசதியானது ஆவியாகும் விகித்தையும் ஏனைய உயிரியல் செயல்முறைகளையும் குறைத்து ஆயுள் காலத்தை அதிகளவில் நீடிப்பதற்கு உதவியாக அமையும். மேலும், குறைந்தளவான வெப்பநிலை எத்தலீன் உற்பத்தி வீதத்தை குறைத்து ஈரப்பதனை இழக்கச்செய்யும் அதே நேரம் சில நுண்ணங்கிகளின் வளர்ச்சியையும் தடுக்கும். பழங்கள் அறுவடைசெய்யப்பட்டதன் பின்னர், கூடுமான விரைவில் முன்கூட்டி குளிராக்கும் செயன்முறை கள வெப்பத்தை நீக்குவதற்கான செயலாக காணப்படும். அறையில் வைத்து குளிராக்கல், வலிமையான எயர் கூலின் வசதி, நீர்வலு குளிராக்கல் வசதி, அதிகளவு கட்டியாக்குதல், வளி-வெற்றுக் குளிராக்கல் வசதி முதலிய வித்தியாசமான முறைகளினூடாக குளிராக்கும் இந்த செயல் வசதியை அடைய முடியும். அறையில் வைத்து குளிராக்குவது மிகவும் இலகுவான தாக இருந்தாலும், மந்தமான செயல்முறையாகும். இது நுகர்வுப் பொருட்களை பல நாட்களுக்கு ஒரு குளிரூட்டல் அறையில் வைத்து குளிராக்குவதை கருதுகின்றது. குளிராக்கல் வளி அறையினுள்ளும் அதே போல் நுகர்வுப் பொருட்களை சுற்றியுள்ள குளிர்சாதனப் பெட்டி விசிறியினுள்ளும்/விசிறிகளினுள்ளும் கணித்து நிர்ணயிக்கப்படுகின்றது. வலிமையான உயர் கூலின் வசதியில், குளிரான வளி, நுகர்வுப் பொருட்களின் ஒவ்வொரு துண்டையும் சுற்றியிருக்கும் ஓட்டத்தின் நிமித்தம் வலிமைப்படுத்தப்படும். அறையில் வைத்து குளிராக்கும் முறையுடன் ஒப்பிடும் போது, இது ஒரு மேம்பட்ட நுட்பமாக கருதப்படுகின்றது. மேலும், இது பழங்களையும் மரக்கறி வகைகளையும் குளிராக்குவதற்கு பரந்தளவில் பயன்படுத்தப்படும் ஒரு முறையியலாகும் [ஆர். கியுலியோ, 1960, ஆர்.ஏ. பார்ஸன்ஸ் et. al., 1970 மற்றும் சி.டீ. பேர்ட், et. al., 1988].


ஆகையால், நாம் இந்தக் கருத் திட்டத்தின் கீழ், புதிய மாம் பழத்திலிருந்து கள வெப்பநிலையை நீக்கி களஞ்சிய காலத்தை நீடிப்பதற்கு செலவு குறைந்த வலிமையான ஒரு எயார் கூலர் சாதனத்தை வடிவமைத்து நிர்மாணிக்கவுள்ளோம். மாம் பழ விநியோக சங்கிலியில் மா மரங்களை வளர்ப்பவர்களாக, மாம் பழங்களை சேகரிப்பவர்களாக, மாம் பழங்களை எடுத்துச்செல்பவர்களாக அல்லது மாம் பழ மொத்த விற்பனையாளர்களாக, துல்லியமாக ஈடுபடுகின்ற நபர்களுக்கும் மற்றும் மாம் பழங்களை நுகர்வோருக்கும் மாம் பழ உற்பத்தியின் தரத்தையும் மற்றும் மாம் பழ உற்பத்தியின் ஆயுளையும் அதிகரிப்பதற்கு இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் பயனுள்ளதாக அமையும். இதனால், அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகள் குறையும். ஆதலால், இது அத்தகைய நபர்களின் வருமானத்தை அதிகரிக்க உதவும்.


சேகரிக்கப்பட்ட மாதிரிகள் மீளாய்வு செய்யப்பட்டமை, CFD மாதிரியைப் பயன்படுத்தி மாதிரி உறுதிப்படுத்தப்பட்டமை, இரசாயனப் பதார்த்தங்கள், உபகரங்கள், மூலப்பொருட்கள் என்பன வழங்கப்பட்டமை, மாதிரி நிர்மாணங்கள் அமைக்கப்பட்டமை என்பன 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த பிரதான செயற்பாடுகளாகும்.

10. தாமரையின் அறுவடைக்கு பிற்பட்டகால ஆயுளுக்கும் மற்றும் மேம்பட்ட தரத்திற்குமான திறமுறைகளை கண்டறிந்து அபிவிருத்தி செய்தல் அபிவிருத்தி செய்யப்படவுள்ள குளிர் முறைமை

தாமரை பூக்கள் இலங்கையின் உலர் வலயத்தில் பரந்தளவில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. குளங்கள் அதிகளவில் கிடைக்கக்கூடியதாக இருப்பதால், அனுராதபுரம் தாமரை பூக்களை உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளில் ஒரு பகுதியாக காணப்படுகின்றது. கிராமிய மக்கள் தாமரை பூக்களை பறிக்கும் தொழிலில் ஈடுபடுகின்றனர். எனினும், அதிகளவில் வீணாகக்கூடிய சாத்தியம் இருப்பதால், தாமரை பூக்கள் குறுகிய ஒரு காலப்பகுதியினுள் அழிந்து ஓய்ந்துவிடுகின்றன. ஆகையால், அந்த மக்களினால் சிறந்த வருமானத்தை ஈட்டமுடியாதுள்ளது.


தகாத கையாளுகை செயன்முறைகள் காணப்படுவதால், அறுவடைக்கு பிற்பட்ட குறுகிய கால ஆயுள் இருப்பது இந்தத் துறையிலுள்ள பிரச்சினையாகும். வெட்டிப் பறிக்கப்படும் தாமரை பூக்களின் தரத்தையும் ஆயுளையும் மேம்படுத்தும் பொருட்டு ஒரு செயன்முறைகள் அடங்கிய பொதியை அபிவிருத்தி செய்யும் அம்சம் ஒரு முன்மொழிவு செயற்பாடாக விளங்குகின்றது. குறித்த கருத் திட்டம் 2018.01.01 ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்தக் கருத் திட்டம் 2019.06.30 ஆம் திகதி முடிவடையும். வருடத்திற்கு இரண்டு தடவைகள் நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், வேலையரங்குகள், ஆராய்ச்சி மாநாடுகள் என்பவற்றினூடாக, இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் இலக்குக் கொள்ளப்பட்டுள்ள நபர்களுக்கு மத்தியில் பரம்பல் செய்யப்படும். தாமரை பூக்களை வெட்டிப் பறிக்கும் தொழிலில் ஈடுபடும் நபர்கள் நேரடியாக நன்மைபெறும் நபர்களாவர். தாமரை பூக்களை வாங்குகின்ற நபர்கள் இந்தத் தொழிலில் மறைமுக நன்மைபெறுநர்களாவர்.





தாமரை பூக்களை பறிப்பவர்களாக, சேகரிப்பவர்களாக, விற்பனை செய்பவர்களாக தாமரை பூக்கள் வணிகத்தில் துல்லியமாக ஈடுபடும் தரப்புகளுக்கு தாமரை பூக்களின் உற்பத்தித் தரத்தையும் ஆயுளையும் அதிகரிப்பதற்கு இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் உதவியாக அமைவதால், தாமரை பூக்களின் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகள் குறையும். ஆதலால், இது அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு உதவும்.

தாமரை பூக்கள் (*Nelumbonucifera*) அனுராதபுர பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டன. கீழ்காணும் ஆய்வு ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பூக்களை அறுவடைசெய்யும் நாள் மற்றும் சிறந்த முதிர்ச்சி கட்டம் ஆகியவற்றை கண்டறியும் நிமித்தம் ஒரு ஆராய்ச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இரு வித்தியாசமான பூ இதழ் கட்டங்களும் பாகமாக மலரும் பூ கட்டமும் அறுவடைசெய்யப்பட்ட முதிர்ச்சி கட்டங்களாக காணப்பட்டன. அதிகாலை நேரத்தில், அதிகாலை கழிந்த சற்று நேரத்தில், மாலை நேரத்தில் என மூன்று வித்தியாசமான நேரங்களில் தாமரை பூக்கள் பறிக்கப்பட்டன. அதிகாலை நேரத்தில் தாமரை பூக்களை பறிப்பது மிகவும் பொருத்தமான நேரமாகவும் அதே நேரம் மலருவதற்கு ஒரு நாளைக்கு முன்னர் பூ இதழ்கள் தோன்றும் கட்டம் மிகவும் சிறந்த முதிர்ச்சி கட்டமாகவும் அவதானிக்கப்பட்டது.



மூன்று பொதியிடுகை முறைகளுக்கு மத்தியில் ஏற்றியிறக்குவதற்கான சிறந்த பொதிடும் முறையையும் அதே போல் சிறந்த அறுவடை முறையையும் (பிடுங்கியெடுத்தல் மற்றும் கத்தரிக்கோல்களை பயன்படுத்தி வெட்டியெடுத்தல்) கண்டறியும் நிமித்தம் இரண்டாவது ஆராய்ச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்டுள்ளது போல் அறுவடைசெய்யப்பட்டு பொதியிடப்பட்டிருந்த பூக்கள் கூடுமான விரைவில் ஆய்வுகூடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டன. ஆய்வுகூடத்தில் தரவுகள் பெறப்பட்டன. பூக்களை பழுதடையாமல் பாதுகாக்கக்கூடிய சிறந்த கரைசல்களையும் மற்றும் சிறந்த களஞ்சிய சூழ்நிலைகளையும் கண்டறியும் நிமித்தம் மூன்றாவது ஆராய்ச்சி ஆய்வு சம காலத்தில் மேற்கொள்ளப்படும். ஆகையால், இந்த தாமரை பூக்களின் இதழ்கள் பழுதடையாமல் பாதுகாக்கக்கூடிய கரைசல்களில் அமிழ்த்தி வைக்கப்படும். கட்டுப்பாடுடைய வெப்பநிலை அல்லது சாதாரண வளிமண்டல வெப்பநிலை தேர்ந்தெடுக்கப்பட்ட வித்தியாசமான களஞ்சிய சூழ்நிலைகளாக காணப்பட்டன.


11. பழங்களின் முதிர்ச்சித்தன்மையை கண்டறியும் குறைந்தளவு செலவு வாய்ந்த ஒரு விம்ப பதனிடுகை சாதனத்தை தயாரித்தல்

நுகர்வோருக்கு சரியாக முதிர்ந்த கனிந்த மாம் பழங்களை வழங்குவதற்கும் அதேபோல் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைப்பதற்குமான ஒரு தேவைப்பாடு குறித்த கருத்திட்டத்தில் காணப்படுகின்றது. இந்த ஆராய்ச்சி அபிப்பிராயம் அக்கறையுடைய தரப்புகளினூடாக இனங்காணப்பட்டது. மாம் பழங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளும் மற்றும் மாம் பழங்களை சேகரிப்போரும் நேரடியாக நன்மை அடைவார்கள். அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைக்கும் நிமித்தம் அனுகூல அறுவடை முதிர்ச்சி கட்டத்தை கண்டறிவது இந்த ஆராய்ச்சியின் பரந்த குறிக்கோளாகும். அனுகூல அறுவடை முதிர்ச்சி கட்டத்தை கண்டறிவதற்கு பயன்படுத்தப்படும் சில கருவிசாதனங்கள் காணப்படுகின்றன. எனினும், அத்தகைய கருவிசாதனங்கள் விலை மிகுந்தனவாகும். மேற்குறித்த பிரச்சினைகளை அடையாளப்படுத்தும் பொருட்டு, பழங்களின் நிறத்தை சோதனையிட்டு மதிப்பிடுவதற்கான டிஜிட்டெல் விம்ப சாதனத்தின் அடிப்படையில் கணனி வாசக முறைமை (SVC) அபிவிருத்தி செய்யப்பட்டது. ஆகையால், இந்த ஆராய்ச்சி, நுகர்வுப்பொருட்களிலுள்ள இரசாயனக் கலவைகளை நிறங்களின் தகவல் அடிப்படையில் அளவிடுவதற்கான ஆற்றலுடைய எடுத்துச்செல்லக்கூடிய ஒரு கருவிசாதனத்தை வடிவமைத்து தயாரிப்பதில் இலக்குக்கொள்கின்றது.

சேகரிக்கப்பட்ட தகவல்கள் IPHT நிறுவகத்தின் நூலகசாலையினது இன்டர்நெட் வசதியினூடாக மீளாய்வு செய்யப்பட்டன. சேகரிக்கப்பட்ட அத்தகைய தகவல்கள் ஆய்வு செய்யப்பட்டன. கரத்தகொலம்பான் மற்றும் TJC ஆகிய மாம் பழ இனங்களுக்காக முறையே நாச்சியாதீவு மற்றும் நொச்சியாகம ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள இரண்டு பண்ணை ஸ்தலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முதலாவது பயிர்ச்செய்கை போகத்தின் நிமித்தம் மாழ் பழங்கள் வகைப்படுத்தும் செயல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாவது பயிர்ச்செய்கை போகத்தில் அத்தகைய மாம் பழங்கள் வகைப்படுத்தும் செயல் நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது. சேகரிக்கப்பட்ட மாதிரிகள்

தேவையான சுவைத்தன்மையின் நிமித்தம் பகுப்பாய்வு செய்யப்பட்டன. கணித மாதிரி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

12. இலங்கையில் களஞ்சியப்படுத்தப்படும் சோளத்தின் களஞ்சிய தரம் மற்றும் பூச்சிகள் தொற்றளவு ஆகியன மீதான சிற்றனெல்லா புல் இலை பிரித்தெடுத்தல்களின் பயன்






நாட்டின் மொத்த சோள உற்பத்தி 2015 ஆம் ஆண்டில் 261 மில்லியன் மெற்றிக் டொன் (மத்திய வங்கி அறிக்கை, 2015) என பதிவாகியிருந்தது. சோள உற்பத்தியை பொறுத்த வரையில், சோளம் இலங்கையில் பயிரிடப்படும் நிலத்தின் அளவில் நெல்லுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தை பெறுகின்றது. பூச்சிகள் கிருமிகள் குறிப்பாக உலர் வலய நாடுகளில் பண்ணை மட்டத்திலும் அதே நேரம் களஞ்சிய மட்டத்திலும் அதிகளவு உணவுத் தானியங்களின் இழப்புகளுக்கு காரணமாக அமைகின்றன. மிகவும் தெளிவான சுகாதார அணுகலை அதிகரிக்கும் நிமித்தம் புகையடித்து தொற்றுநீக்கிகள் மற்றும் இரசாயனப் பூச்சிநாசினிப் பதார்த்தங்களின் கழிவுகள் என்பவற்றின் பாவனையினூடாக அடிப்படை ரீதியில், பூச்சிகள் தொற்றுக்களின் கட்டுப்பாட்டு செயன்முறை பிரயோகிக்கப்படுகின்றது. தானியங்களை களஞ்சியப்படுத்தும் போது பயன்படுத்தப்படும் இரசாயன பூச்சிகொல்லிகள் பதார்த்தங்களுடன் இணைந்த அதிகளவு கடுமையான நேரடி மற்றும் மறைமுக பிரச்சினைகள் காணப்படுகின்றன. சுற்றாடல் மாசு, உணவுத் தானியங்களில் உருஞ்சப்படுகின்ற பூச்சிநாசினிகளின் கழிவுகள், இலக்குக்கொள்ளப்படாத நுண்ணங்கிகளுக்கான பூச்சிநாசினிகளின் எதிர்தாக்கங்கள், நச்சுத்தன்மை, அதிக செலவு, பிரயோகத்தில் கஷ்டங்கள் முதலியன அத்தகைய பிரச்சினைகளாகும்.

களஞ்சியப்படுத்தப்படும் உற்பத்திகளை பாதுகாப்பதற்கான உள்நாட்டு மூலப்பொருட்களின் மதிப்பீடு பற்றிய ஆராய்ச்சி, இலங்கையில் மிக முக்கியமானதாக காணப்படுகின்றது. ஆகையால், இலங்கையில் களஞ்சியப்படுத்தப்படும் சோளத்தின் களஞ்சிய தரம் மற்றும் பூச்சிகள் தொற்றளவு ஆகியன மீதான சிற்றனெல்லா புல் இலை பிரித்தெடுத்தல்களின் பயன்கள் பற்றி ஆய்வு செய்யும் நிமித்தம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வு குறிப்புப் பணி நிறைவு செய்யப்பட்டது. பிரித்தெடுத்து தயாரிப்பதற்கான முறை முடிவு செய்யப்பட்டது. தென் பகுதியிலிருந்து சிற்றனெல்லா புற்கள் சேகரிக்கப்பட்டன. சிற்றனெல்லா புற்களின் இலைகள் துண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு அதன் பின்னர் 40°C வெப்பநிலையில் ஒரு அடுப்பில் வைத்து உலர்த்தப்பட்டு தூளாக கலக்கப்பட்டன. 20 கிராம் அளவான தூள் கொதித்து கொதி தணிந்த 150 மில்லி லீற்றர் நீரில் கலக்கப்பட்டது. குறித்த கலவை காந்த கலப்பு சாதனத்தைக் கொண்டு 60 நிமிடங்கள் வரை (650 rpm அளவில்) நன்றாக கலக்கப்பட்டு, 24 மணித்தியாலங்கள் வரை பேணிவைக்கப்பட்டது. குறித்த கலவை சுத்தமான ஒரு தூய துணியைக் கொண்டு வடிக்கப்பட்டு மீண்டும் வடி தாளினூடாக வடிக்கப்பட்டது. குறித்த கலவைகள் கூஜாக்களில் சேகரிக்கப்பட்டன. குறித்த கலவைகள் 10 மில்லி லீற்றர் பெறுமான அளவு வரை 80 °C வெப்பநிலையில் வைத்து நீரில் கழுவி கொதித்து தணிந்த நீராவியால்



செறிவாக்கப்பட்டன. கொதித்து தணிந்த நீரில் களஞ்சிய கரைசலை கரைத்து 15, 20, 50 மற்றும் 100µl/மில்லி லீற்றர் என்ற நான்கு வித்தியாசமான செறிவு அளவுகளில் கலவைகள் தயாரிக்கப்பட்டன. உள்நாட்டு சந்தையிலுள்ள சோள களஞ்சிய தொற்றுக்களிலிருந்து Sitophiluszeamaize எனும் பூச்சி திசுக்கள் பெறப்பட்டன. வளி ஊடுருவலின் நிமித்தம் இறப்பர் பட்டிகளைப் பயன்படுத்தி குறிப்பிட்டவொரு நிலையில் மல்சின் துணியால் மூடிய கண்ணாடி கூஜாக்களில், தொற்றுநீங்கிய சோளத் தானியங்கள் முழுமையாக வளர்க்கப்பட்டன. ஒரு வார சோள வீவில்கள் சகல ஆய்வுகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டன. இலைகள் பிரித்தெடுத்தல்களின் சுழற்சிப் பயன் 4 திடமான செறிவுகளின் நிமித்தம் பரிசோதிக்கப்பட்டுள்ளது. ஒரு சில மாற்றங்களைக் கொண்டு மெக்டொனால்ட் (1970), தாலூக்கர் மற்றும் ஹொவ்ஸ் (1993) பகுதி விருப்ப பயோஸோவை பிரயோகித்து சுழற்சிப் பயன் மதிப்பிடப்பட்டது. SPSS 20 ஐ பயன்படுத்தி வித்தியாசப் பகுப்பாய்வு (ANOVA) முறையை பிரயோகித்து தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. விகிதங்கள் டியுகிஸ் பரிசோதனையினூடாக (P=0.05) பிரிக்கப்பட்டன. கணிசமான உயர்ந்தளவு சுழற்சி சுட்டி பதனிடுகை முறை 3 இல் (50µl/மி.லீ.) பதிவாகியிருந்தது.

அபிவிருத்தி கருத் திட்டங்களினூடான தொழில்நுட்ப பரிமாற்றல் செயற்பாடுகள்

தொழில்நுட்பங்களின் பிரயோகத்தையும் மற்றும் அறுவடைக்கு பிற்பட்டகால கைத்தொழில் மீது அவற்றின் தாக்கங்களையும் உறுதிசெய்யும் நிமித்தம், 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில், NIPHM நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி கருத் திட்டங்கள் பற்றி கீழே விவரிக்கப்பட்டுள்ளது. உற்பத்தியை அதிகரித்தல், ஏற்றுமதி சந்தைகள் பற்றி ஆராய்தல், விவசாய வணிக அபிவிருத்தி, உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்தல் முதலிய அம்சங்களை நோக்கிய இலக்குக்கொள்ளப்பட்ட தேசிய முந்துரிமைகள் காணப்படுகின்ற வேளையில், அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம், தேசிய நோக்கெல்லையின் மிகவும் ஒரு முந்துரிமை பிரிவாக மாறியுள்ளது. இந்த சந்தரப்பசூழ்நிலையில், NIPHM அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப பிரிவில் காணப்படும் பிரச்சினைகளை அடையாளப்படுத்தும் நிமித்தம் அபிவிருத்தி கருத் திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளது. ஆதலால், அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைப்பதற்கும் மற்றும் விவசாய உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் இலக்குக்கொள்ளப்படுகின்றது. மேலும், இந்தக் கருத் திட்டங்கள் நாடு முழுதிலும் விவசாய வணிக அபிவிருத்திற்கு மேம்பட்ட தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், அறுவடைக்கு பின்-தேசிய முகாமைத்துவ நிறுவகம் அறுவடைக்கு பின்-தொழில்நுட்பங்களை பயனுள்ள விதத்தில் பரம்பல் செய்யும் நிமித்தம் நாடளாவிய ரீதியில் 08 அபிவிருத்திக் கருத் திட்டங்களை செயற்படுத்தியுள்ளது. இந்தக் கருத் திட்டங்களுக்கு 'தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்' கீழ் கமத்தொழில் அமைச்சினூடாக நிதியளிக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கமத்தொழில் அமைச்சினூடாக கிடைத்த மொத்த நிதி 85.19955 மில்லியன் ரூபாவாகும். குறித்த அந்த அபிவிருத்தி கருத் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

a. இலங்கையில் மாம் பழ விநியோக பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு
b. இலங்கையில் கொய்யாப் பழ விநியோக பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு
c. இலங்கையில் பப்பாசி விநியோக பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு
d. இலங்கையில் வாழைப் பழ விநியோக பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு
e. இலங்கையில் விவசாய உற்பத்திகளின் விநியோக பெறுமான சங்கிலிகள் முகாமைத்துவம்
f. அரிசிக்கான திடமான பகிர்ந்தளிப்பு வலையமைப்பை செயற்படுத்துவதற்கான முன்னோடிக் கருத் திட்டம்
g. உணவுப் பாதுகாப்புக்கு மேம்பட்ட அறுவடைக்கு பின்-தொழில்நுட்பங்களை பிரயோகிப்பது பற்றி பொது சுகாதார பரிசோதகர்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்
h. நாட்டில் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் மற்றும் உணவுப் பாதுகாப்பு இலக்கை அடைவதற்கும் அக்கறையுடைய தரப்புகளுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் நிமித்தம் ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துதல்


a. இலங்கையில் மாம் பழத்தின் விநியோக சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு

மா அதன் அதிகளவான சுவை மற்றும் போஷாக்கு பெறுமானம் ஆகியவற்றின் காரணமாக வர்த்தகளவிலான பயிர்ச் செய்கையாக, வீட்டுத் தோட்டங்களில் அதிகளவில் பயரிடப்படுகின்றது. எனினும், பொருத்தமற்ற அறுவடைக்கு பிற்பட்டகால செயன்முறைகளின் பிரயோகம் மற்றும் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகள் என்பவற்றினால் பழங்களின் தரம் குறைவடைகின்றது. இதனால் மாம் பழங்களை கையாளுவதில், குறித்த கைத்தொழில் பெரும் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றது. இது நுகர்வோருக்கும் மற்றும் ஏனைய சகல நன்மைபெறுநர்களுக்கும் நன்மைகளை மட்டுப்படுத்தும் அளவுக்கு மாம் பழ கைத்தொழிலை ஆக்கியிருந்தது. ஆகையால், பழங்களிலிருந்து கிடைக்கும் இலாபம் குறைந்து, சந்தை விலை அதிகரிக்கின்ற அதே வேளையில் பழத்தின் தரமும் குறைவடைகின்றது.

இத்தகைய பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக, ஒரு அபிவிருத்திக் கருத் திட்டம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த இந்தக் கருத் திட்டம் 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டிலும் அது மேற்கொள்ளப்பட்டது. மாம் பழத்தின் விநியோக பெறுமான சங்கிலிகளை மேம்படுத்தும் செயற்பாடுகள் குறித்த கருத் திட்டத்தில் உள்ளடங்குகின்றன. குறித்த கருத் திட்டத்தின் கீழ், பிரதானமாக நாடு முழுதிலும் கையாளும் மற்றும் பதனிடும் அலகுகளை தாபித்தல், பயிற்சியளித்தல் ஆகியன தொடர்பான ஒரு அடிப்படை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சகல பொருத்தமான அறுவடைக்கு பின்-தொழில்நுட்பங்களும் பிரயோகிக்கப்படுகின்ற மற்றும் தரத்தில் உயர்ந்த மாம் பழங்கள் சந்தைப்படுத்தப்படுகின்ற பிரதேசங்களில் மாம் பழம் பதனிடும் வலயங்களை தாபிப்பது குறித்த கருத் திட்டத்தின் பிரதான செயற்பாடாக காணப்பட்டது. அறுவடை, கையாளுகை மற்றும் பொதியிடுகை, கனியவைத்தல், வர்த்தகப் பெயர்களாகப் பெயரிடுதல், ஏனைய சந்தைப்படுத்தல் திறமுறைத்திட்டங்கள் என்பன அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களில் அடங்குகின்றன.


2017 ஆம் ஆண்டில், ஓமார்கொல்லவிலும் (குருனாகல் மாவட்டம்), பேராதெனியவிலும் (கண்டி மாவட்டம்) மாம் பழம் பதனிடும் இரண்டு வலயங்கள் தாபிக்கப்பட்டன. இந்தப் பகுதிகளில் மாம் பழங்களை கையாளும் பதனிடும் 11 நிலையங்களும் தாபிக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில், போகஹகந்த (கண்டி மாவட்டம்), கலேவெல (மாத்தளை மாவட்டம்) உடுவில் (யாழ்ப்பாண மாவட்டம்), கல்ஒயா (அம்பாறை மாவட்டம்), வெல்லவாய (மொனராகல் மாவட்டம்), மினுவங்கொட (கம்பஹா மாவட்டம்), எப்பாவெல (அனுராதபுர மாவட்டம்), பெலிகமுவ (மாத்தளை மாவட்டம்) ஆகிய இடங்களில் மாம் பழம் பதனிடும் எட்டு வலயங்களும் மற்றும் மாம் பழம் கையாளும் பதனிடும் 44 அலகுகளும் தாபிக்கப்பட்டன.





PERADENIYA MANGO
DEVELOPED BY IPHT


BOGAHAKANDA MANGO
DEVELOPED BY IPHT


GALOYA MANGO
DEVELOPED BY IPHT


වැල්ලවාය MANGO
WELLAWAYA MANGO
DEVELOPED BY IPHT
IPHT
මිනුවන්ගොඩ MANGO
MINUWANGODA MANGO
DEVELOPED BY IPHT
IPHT
JAFFNA MANGO
JAFFNA MANGO
DEVELOPED BY IPHT


IPHT
GALEWELA MANGO
DEVELOPED BY IPHT
NIPHM
EPPAWALA MANGO
DEVELOPED BY NIPHM


NIPHM
BELIGAMUWA MANGO
DEVELOPED BY NIPHM


தரத்தில் உயர்ந்த மாம் பழங்கள் தற்பொழுது பின்வரும் பத்து வித்தியாசமான வர்த்தகப் பெயர்களில் சந்தைப்படுத்தப்படுகின்றன. மாம் பழங்களை நுகரும் நுகர்வோருக்கும் மற்றும் வர்த்தகர்களுக்கும் மத்தியில் வர்த்தகப் பெயர்களிலான மாம் பழங்களுக்கு அதிகளவு கேள்வி நிலவுவது அவதானிக்கப்பட்டது.

b. கொய்யாப் பழத்தின் விநியோக பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு

கொய்யாப் பழம் உலர் வலயங்களில் பிரதானமாக பயிரிடப்படுகின்ற அதிகரித்து வருகின்ற பழப் பயிர்களில் ஒரு பயிராகும். இலங்கையின் காலநிலையும் மற்றும் ஏனைய காரணிகளும் அதிக விளைச்சலை தரக்கூடிய கொய்யாப் பழப் பயிர்ச் செய்கைக்கு அனுகூலமாக காணப்படுகின்றன. எனினும். அறுவடைக்கு பிற்பட்டகால அதிக இழப்புகள் ஏறக்குறைய 30-35% இடைப்பட்ட வீதத்தில் பதிவாகியிருக்கின்றது. பொருத்தமற்ற அறுவடைக்கு பிற்பட்டகால செயன்முறைகளின் பிரயோகம் போன்ற தரம் குறைவடைதல் மற்றும் தொடர்புடைய பாதுகாப்பு சார்ந்த பிரச்சினைகள் என்பன குறித்த கைத்தொழிலை இலாபம் குறைந்ததாகவும் மற்றும் பிரச்சினைக்குரியதாகவும் ஆக்கியிருந்தன. ஆகையால், இத்தகைய பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கில், குறித்த கருத் திட்டம் அனுராதபுர மாவட்டத்தில், 2017 ஆம் ஆண்டு முன்னோடி அளவில் ஆரம்பிக்கப்பட்டது. வெற்றிகரமான செயற்படுத்துகையையடுத்து, குறித்த கருத் திட்டம் 2018 ஆம் ஆண்டில் நாட்டில் ஏனைய பாகங்களுக்கும் வியாபிக்கச்செய்யப்பட்டது.

கொய்யப் பழத்தின் அறுவடைக்கு பிற்பட்டகால மேம்பட்ட செயன்முறைகள் பற்றிய அறிவை மேம்படுத்தும் நிமித்தம் அக்கறையுடைய தரப்புகளுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியமை இந்தக் கருத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளில் ஒரு செயற்பாடாகும். ஆகையால், 2017 ஆம் ஆண்டில் 03 நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக 57 பயன்னுகரிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. அதேபோல், 2018 ஆம் ஆண்டில் 05 அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக அத்தகைய 108 பயன்னுகரிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைப்பதற்கும் மற்றும் கொய்யப் பழங்களின் தரத்தையும் அதே போல் கொய்யாப் பழ சங்கிலியின் செயன்றைகளையும் மேம்படுத்துவதற்கும் என கொய்யப் பழங்கள் பதனிடும் வலயங்கள் தாபிக்கப்பட்டன. அறிமுகப்படுத்தப்பட்ட செயன்முறைகளின் பிரயோகத்தை இலகுபடுத்தும் நிமித்தம், உபகரணங்களும் மற்றும் ஏனைய வசதிகளும் நாடளாவிய ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயன்னுகரிகளுக்கு வழங்கப்பட்டன. ஆகையால், அனுராதபுர மாவட்டத்தின் மகாஇலுப்பள்ளம பகுதியில், 27 கொய்யாப் பழங்கள் கையாளுகை பதனிடுகை அலகுகள் தாபிக்கப்பட்டன. இத்தகைய 20 எண்ணிக்கையான கையாளும் பதனிடும் அலகுகளை நாடளாவிய ரீதியில் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டது. ஆதலால், அறுவடைக்கு முற்பட்டகால கட்டத்தில் கொய்யாப் பழங்களை இடுவதற்கு தேவையான உறைகள், பருமன், அளவு என்பவற்றின் அடிப்படையில் சரியாக தரம் பிரித்தல், பழங்களைத் தாக்கக்கூடிய பூச்சிகளின் தாக்கங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கான பெரோமோன் கன்னி வலைகளின் பிரயோகம், பாதுகாப்பான உறைகளில் அடைத்து ஏற்றியிறக்குதல் (ப்ளாஸ்டிக் கூடைகளை பயன்படுத்தி களத்திலிருந்து பொதியிடும் நிலையங்களுக்கு எடுத்துச்செல்லல், கனிந்த பின்னர் 5-ப்லை துருப்பிடிக்காத நார் பலகைப் பெட்டிகளை- CFB பயன்படுத்தி பொதியிடும் நிலையங்களிலிருந்து உள்நாட்டு சந்தைகளுக்கு எடுத்துச்செல்லல்) வர்த்தகப் பெயரிலான குறித்த பழங்களை பதனிடுவதற்கான CFB பெட்டிகள் மற்றும் ஸ்டிக்கெர்கள், ப்ளாஸ்டிக் கூடைகள், பழ உறைகள், பெரோமோன் கன்னி வலைகள், தரம்பிரிக்கும் பொதியிடும் மேசைகள் என்பவற்றை வழங்கி, பயன்னுகரிகளுக்கு பொருத்தமான அறுவடைக்கு பிற்பட்டகால செயன்முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

எனினும், பயன்னுகரிகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிப்பதற்கு தேவையான சில உபகரணங்களை விநியோகிப்பதில் ஏற்பட்ட தாமதங்களின் காரணமாக இத்தகைய அலகுகளின் தாபிப்பு பணியை 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய முடியவில்லை. கிடைக்க வேண்டிய ஏனைய உபகரணங்கள் கிடைத்த பின்னர், அத்தகைய உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டில் அத்தகைய வலயங்கள் தாபிக்கப்படும். இப்பளோகம கொய்யாப் பழம், பொல்பித்திகம கொய்யாப் பழம், குளியாபிட்டிய கொய்யாப் பழம் ஆகிய வர்த்தகப் பெயர்களில் 03 புதிய கொய்யாப் பழங்கள் உள்நாட்டு சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படும்.



c. வாழைப் பழ விநியோக பெறுமான சங்கிலி முகாமைத்துவ செயன்முறைகள் மேம்பாடு

உற்பத்தி செய்யப்படும் நிலத்தின் அளவு மற்றும் நுகர்வு என்பவற்றின் அடிப்படையில் பார்க்கின்ற போது வாழை இலங்கையில் பயிரிடப்படுகின்ற பெருமளவான பழப் பயிர்களில் ஒரு பழப் பயிராகும். இலங்கையின் காலநிலையும் மற்றும் ஏனைய காரணிகளும் வருடந்தோறும் அதிகளவான வருமானத்தை பெற்றுத்தரக்கூடிய வாழைப் பயிர்ச் செய்கைக்கு மிகவும் அனுகூலமாக காணப்படுகின்றன. ஆயினும், அறுவடைக்கு பிற்பட்டகால பொருத்தமற்ற செயன்முறைகளின் பிரயோகத்தினால் ஏற்படும் அறுவடைக்கு பிற்பட்டகால அதிகளவு இழப்புகளும், தரம் குறைதலும் மற்றும் தொடர்புடைய பாதுகாப்பு சார்ந்த பிரச்சினைகளும் வாழைப் பயிர்ச் செய்கைப் பிரிவை குறைந்தளவு இலாபம் ஈட்டக்கூடியதாகவும் மற்றும் பிரச்சினைக்குரியதாகவும் ஆக்கியிருந்தன. வருடாந்த வாழை உற்பத்தி 3.3 மில்லியன் வாழைக் குலைகள் என்ற அளவில் காணப்படுகின்றது. வருடாந்த வாழைப் பழ உற்பத்தி 26 மில்லியன் பழங்கள் என்ற அளவில் பதிவாகியிருக்கின்றது. அறுவடைக்கு பிற்பட்டகால வருடாந்த கணிய ரீதியான இழப்பு ஏறக்குறைய 30% வீதமாக காணப்படுகின்றது. இது ஒரு வருடத்திற்கு ஏறக்குறைய 0.99 மில்லியன் பழங்களின் இழப்பை சுட்டிக்காட்டுகின்றது. இது வருடாந்தம் 1 பில்லியன் ரூபா பெறுமதியான வாழைப் பழங்கள் வீணாக்கப்படுவதை கருதுகின்றது.

ஆகையால், வாழையுடன் தொடர்புடைய விநியோக பெறுமான சங்கிலி செயற்பாடுகளின் போது பொருத்தமான அறுவடைக்கு பிற்பட்டகால செயன்முறைகளின் பிரயோகத்தை பிரபல்லியப்படுத்தும் பொருட்டு அறிவையும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துவதனூடாக வாழையின் விநியோக பெறுமான சங்கிலிகளில் சகல படிமுறைகளையும் மேம்படுத்தும் நிமித்தம் குறித்த கருத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கருத் திட்டம் அனுராதபுர மாவட்டத்தில் 2017 ஆம் ஆண்டு முன்னோடி அளவில் ஆரம்பிக்கப்பட்டு அதே ஆண்டு அதாவது 2017 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. வெற்றிகரமான செயற்படுத்துகையைக் கொண்டு, குறித்த கருத் திட்டம் நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் 2018 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டு அதே ஆண்டு அதாவது 2018 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. வாழையின் அறுவடைக்கு பிற்பட்டகால மேம்பட்ட செயன்முறைகள் பற்றிய அறிவை மேம்படுத்தும் நிமித்தம் அக்கறையுடைய தரப்புகளுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியமை இந்தக் கருத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளில் ஒரு செயற்பாடாகும். ஆகையால், 2017 ஆம் ஆண்டில் 1 நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக 21 பயன்னுகரிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. அதேபோல், 2018 ஆம் ஆண்டில் 23 அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக அத்தகைய 473 பயன்னுநகரிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைப்பதற்கும் மற்றும் வாழைப் பழங்களின் தரத்தையும் அதே போல் வாழைப் பழ சங்கிலியின் செயன்றைகளையும் மேம்படுத்துவதற்கும் என தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் நாடளாவிய ரீதியில் வாழை பதனிடும் வலயங்கள் தாபிக்கப்பட்டன/அத்தகைய வலயங்களை தாபிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. ஆகையால், அனுராதபுரம் மாவட்டத்தில் ராஜாங்கன பகுதியில் வாழை கையாளும் பதனிடும் 12 வலயங்கள் தாபிக்கப்பட்டு, 'ராஜாங்கன வாழைப் பழம்' என்ற வர்த்தகப் பெயரில் வாழைப் பழம் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அறுவடைக்கு பிற்பட்டகால பழங்கள் கையாளுகை பதனிடுகை செயன்முறைகள் இந்த வலயப் பிரிவுகளில் மேம்படுத்தப்பட்டன. ஆதலால், முதிர்ச்சியடைந்த

கனிந்த பழங்கள் அறுவடை (முதிர்ச்சியற்ற பழங்களை அறுவடை செய்வதை தவிர்த்தல்), அளவு, பாதுகாப்பு, எத்திலீன் வாயுவை பயன்படுத்தி செயற்கையாக கனியவைத்தல் முதலியவற்றின் அடிப்படையில் சரியான களஞ்சிய முறை மற்றும் தரம்பிரித்தல், பாதுகாப்பான உறைகளில் அடைத்து ஏற்றியிறக்குதல் (ப்ளாஸ்டிக் கூடைகளை பயன்படுத்தி களத்திலிருந்து பொதியிடும் நிலையங்களுக்கு எடுத்துச்செல்லல், கனிந்த பின்னர் 5-ப்லை துருப்பிடிக்காத நார் பலகைப் பெட்டிகளை- CFB பயன்படுத்தி பொதியிடும் நிலையங்களிலிருந்து உள்நாட்டு சந்தைகளுக்கு எடுத்துச்செல்லல்) என்பன அடங்கலாக வர்த்தகப் பெயரிலான குறித்த பழங்களை பதனிடுவதற்கான CFB பெட்டிகள் மற்றும் ஸ்டிக்கெர்கள், ப்ளாஸ்டிக் கூடைகள், கனியவைக்கும் கூடார வசதிகள், தரம்பிரிக்கும் பொதியிடும் மேசைகள் என்பவற்றை வழங்கி, பயன்னுகரிகளுக்கு பொருத்தமான அறுவடைக்கு பிற்பட்டகால செயன்முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. எனவே, நாடளாவிய ரீதியில் வாழை கையாளும் பதனிடும் அறுபது (60) அலகுகளை தாபிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. ரங்கிரி புளி வாழைப் பழம், மாவனெல்ல வாழைப் பழம், ரிதியகம வாழைப் பழம், அங்குணுகொலபெலஸ்ஸ வாழைப் பழம், யாழ்ப்பாண வாழைப் பழம், கொத்மலை வாழைப் பழம், எம்பிலிப்பிட்டிய வாழைப் பழம், முல்லைத்தீவு வாழைப் பழம், மொனராகல் வாழைப் பழம் ஆகிய வர்த்தகப் பெயர்களில் 09 புதிய வாழைப் பழங்கள் 2019 ஆம் ஆண்டில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளன. ஆகையால், தேவையான சில உபகரணங்களை விநியோகிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டதால், அத்தகைய அலகுகளை தாபிக்கும் பணிகளை 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய முடியவில்லை.



d. பப்பாசியின் விநியோக பெறுமான சங்கிலி முகாமைத்துவ மேம்பாடு


பப்பாசி உலர் வலங்களில் பிரதானமாக பயிரிடப்படுகின்ற பெருமளவான பழப் பயிர்களில் ஒரு பழப் பயிராகும். இலங்கையின் காலநிலையும் மற்றும் ஏனைய காரணிகளும் அதிகளவான விளைச்சல்களை தரக்கூடிய பப்பாசியின் பயிர்ச் செய்கைக்கு அதிகளவில் அனுகூலமாக காணப்படுகின்றன. எனினும், அறுவடைக்கு பிற்பட்டகால பொருத்தமற்ற செயன்முறைகளின் பிரயோகத்தினால் அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் அதிகளவு இழப்புகள் ஏற்படுவதும் மற்றும் தரம் குறைவதும் பாரம்பரிய விநியோக சங்கிலியில் குறித்த கைத்தொழிலை இலாபம் குறைந்ததாகவும் மற்றும் அத்தகைய கைத்தொழிலை பிரச்சினைக்குரியதாகவும் ஆக்கியிருந்தன. வருடாந்த பப்பாசி உற்பத்தி 26 மில்லியன் பழங்கள் என்ற அளவில் பதிவாகியிருக்கின்றது. அறுவடைக்கு பிற்பட்டகால வருடாந்த கணிய ரீதியான இழப்பு ஏறக்குறைய 46% வீதமாக காணப்படுகின்றது. இது ஒரு வருடத்திற்கு ஏறக்குறைய 11 மில்லியன் பழங்களின் இழப்பை சுட்டிக்காட்டுகின்றது. இது வருடாந்தம் 300 மில்லியன் ரூபா பெறுமதியான பப்பாசிப் பழங்கள் வீணாக்கப்படுவதை கருதுகின்றது.

இத்தகைய பின்னணியில், பப்பாசியுடன் தொடர்பான விநியோக பெறுமான சங்கிலி செயற்பாடுகளின் போது அறுவடைக்கு பிற்பட்டகால பொருத்தமான செயன்முறைகளின் பிரயோகத்தை பிரபல்லியப்படுத்தும் நிமித்தம் அறிவையும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துவதனூடாக பப்பாசியின் விநியோக சங்கிலி மற்றும் பெறுமான சங்கிலி ஆகியவற்றில் சகல படிமுறைகளையும் மேம்படுத்தும் பொருட்டு குறித்த கருத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த கருத் திட்டம் அனுராதபுர மாவட்டத்தில் 2017 ஆம் ஆண்டு முன்னோடி அளவில் ஆரம்பிக்கப்பட்டது. 2017 ஆம்

ஆண்டிலும் அதே போல் 2018 ஆம் ஆண்டிலும் குறித்த கருத் திட்டம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. மேம்பட்ட அறுவடைக்கு பின்-தொழில்நுட்பங்களிலும் அதே போன்று வாழைப் பழங்கள் தொடர்பான பிரயோகங்களிலும் அக்கறையுடைய தரப்புகளின் அறிவை மேம்படுத்தும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது இந்தக் கருத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளில் ஒரு செயற்பாடாக காணப்பட்டது.

குறித்த கருத் திட்டத்தின் கீழ், 2017 ஆம் ஆண்டில் 03 நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக 51 பயன்னுகரிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. அதே போல் 2018 ஆம் ஆண்டில் அத்தகைய 16 நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக அத்தகைய 255 பயன்னுகரிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைப்பதற்கும், பப்பாசியின் தரத்தையும் மற்றும் பப்பாசியின் விநியோக சங்கிலியினது செயன்முறைகளை மேம்படுத்துவதற்கும் என பப்பாசி பதனிடும் வலயங்கள் தாபிக்கப்பட்டன. அறிமுகப்படுத்தப்பட்ட செயன்முறைகளின் பிரயோகத்தை இலகுபடுத்தும் நிமித்தம் உபகரணங்களும் மற்றும் ஏனைய வசதிகளும் நாடளாவிய ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயன்னுகரிகளுக்கு வழங்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில், பப்பாசியை கையாளும் பதனிடும் 12 அலகுகள் அனுராதபுர மாவட்டத்தின் தம்புத்தேகம பகுதியில் தாபிக்கப்பட்டன. நாடளாவிய ரீதியில் (தம்புத்தேகம (அனுராதபுர மாவட்டம்), அம்பன்பொல (குருனாகல் மாவட்டம்), ஆணமடுவ (புத்தளம் மாவட்டம்), அம்பாந்தோட்டை பண்டகிரிய மற்றும் திஸ்ஸமஹாராம (அம்பாந்தோட்டை மாவட்டம்), யாழ்ப்பாணம் (யாழ்ப்பாண மாவட்டம்), ஹத்தோட்ட அமுண (மாத்தளை மாவட்டம்) தாபிக்கப்படும் நிமித்தம் கையாளும் பதனிடும் அத்தகைய 50 புதிய வலயங்களுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், திட்டமிட்டவாறு, தாபிக்கும் பணியை 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய முடியவில்லை. என்றாலும், அம்பன்பொல பப்பாசி, ஆணமடுவ பப்பாசி, பண்டகிரிய பப்பாசி, அம்பாந்தோட்டை பப்பாசி, திஸ்ஸமஹாராம பப்பாசி, யாழ்ப்பாண பப்பாசி, லக்கல பப்பாசி என 07 புதிய வர்த்தகப் பெயர்களில் 2019 ஆம் ஆண்டு பப்பாசிப் பழங்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

கையாளும் பதனிடும் இந்த வலயங்களினூடாக, முதிர்ச்சியடைந்த கனிந்த பழங்கள் அறுவடை (முதிர்ச்சியற்ற பழங்களை அறுவடை செய்வதை தவிர்த்தல்), அளவு, பாதுகாப்பு, எத்திலீன் வாயுவை பயன்படுத்தி செயற்கையாக கனியவைத்தல் முதலியவற்றின் அடிப்படையில் சரியான களஞ்சிய முறை மற்றும் தரம்பிரித்தல், பாதுகாப்பான உறைகளில் அடைத்து ஏற்றியிறக்குதல் (ப்ளாஸ்டிக் கூடைகளை பயன்படுத்தி களத்திலிருந்து பொதியிடும் நிலையங்களுக்கு எடுத்துச்செல்லல், கனிந்த பின்னர் 5-ப்லை துருப்பிடிக்காத நார் பலகைப் பெட்டிகளை- CFB பயன்படுத்தி பொதியிடும் நிலையங்களிலிருந்து உள்நாட்டு சந்தைகளுக்கு எடுத்துச்செல்லல்) என்பன வர்த்தகப் பெயரிலான குறித்த பழங்களை பதனிடுவதற்கான CFB பெட்டிகள் மற்றும் ஸ்டிக்கெர்கள், ப்ளாஸ்டிக் கூடைகள், கனியவைக்கும் கூடார வசதிகள், தரம்பிரிக்கும் பொதியிடும் மேசைகள் என்பவற்றை வழங்கி, பயன்னுகரிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.



e. இலங்கையில் விவசாய உற்பத்திகளினது விநியோக பெறுமான சங்கிலி

அழியக்கூடிய உணவப் பொருட்களின் பெறுமான சங்கிலியில் காணப்படும் விலை ஏற்றத்தாழ்வு உணவுக் கைத்தொழிலில் அவதானிக்கக்கூ பாரிய பிரச்சினைகளில் ஒரு பிரச்சினையாகும். அறுவடை செய்யப்படும் காலத்தில், பிரதானமாக தானியங்களும் அழியக்கூடிய உணவுப் பயிர்களும் மேலதிகமாக விநியோகிக்கப்படுவதால், ஆகக்குறைந்த அடிப்படை விலைகளை விடவும் விலைகள் குறைவடைகின்றன. அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளுக்கு வழிவகுக்கும் விநியோக சங்கிலி வியாபிப்பும் நிகழ்கின்றது. இது, விவசாய உற்பத்திகளின் தரம் குறைவதற்கு விளைவாக அமைகின்றது. விவசாய உற்பத்திகளின் தகாத பகிர்ந்தளிப்பு குறித்த கைத்தொழிலில் எதிர்நோக்கப்படும் மற்றொரு பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினை குறித்த ஆண்டின் விளை பருவ காலத்தில் மிகை அளவுக்கும் அதே போல் பருவமல்லாத காலத்தில் பற்றாக்குறைக்கும் வழிவகுக்கின்றது. பகிர்ந்தளித்தல் வலையமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் விடயமானது குறித்த கைத்தொழிலில் அதிக பல பிரச்சினைகளை தீர்க்கக்கூடியதாக அமையலாம். ஆகையால், இலங்கையில் அழியக்கூடிய உணவுப் பொருட்களின் விநியோக சங்கிலியை மீளொழுங்கமைக்கும் நடவடிக்கையை முன்னெடுக்கும் நிமித்தம் ஒரு அபிவிருத்தி கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில், பயிர் உற்பத்தியும் மற்றும் நுகர்வும் தொடர்பான இரண்டாம்நிலைத் தரவுகள் விவசாயத் திணைக்களம், HARTI நிறுவகம் போன்ற அரச நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன. பி.செ. மட்டத்திலான பயிர் உற்பத்தித் தரவுகள் பி.செ. அலுவலகங்களின் புள்ளிவிபரப் பிரிவுகளிலிருந்து சேகரிக்கப்பட்டன.



மரக்கறிகளின் இழப்பு மதிப்பீட்டு ஆய்வு

A. போக்குவரத்தினால் ஏற்பட்ட எந்திர ரீதியான பாதிப்புகள் பற்றிய ஆய்வுகள்


B. கள ரீதியான இழப்பு மதிப்பீட்டு செயற்பாடு

மேலும், வினாக்கொத்துக்களை பயன்படுத்தி, APRA மட்டங்களில் பயிர்கள் உற்பத்தி தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டன. தக்காளி, கத்தரிக்காய், கரட்டு, ஸ்னெப் பீன், லோங் பீன், ஒக்காரா, புடோலங்காய், பாகற்காய், வெள்ளரிக்காய், பீற்றூட்டு, லீக்ஸ், பச்சை மிளகாய் முதலிய 12 மரக்கறி வகைகளினதும் அதே போல் பப்பாசி, வாழை, கொய்யா போன்ற மூன்று பழ வர்க்கங்களினதும் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகள் அளவீடு பற்றிய ஆய்வுகள் நாடு முழுதிலும் 10 விநியோக சங்கிலிகளில் மேற்கொள்ளப்பட்டன.

f. உணவுகளின் பாதுகாப்பு நிமித்தம் மேம்பட்ட அறுவடைக்கு பின்-தொழில்நுட்பங்கள் பற்றிய பொது சுகாதார பரிசோதர்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்

ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகின்ற உணவு பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளும் அதே போல் அத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு விதிக்கப்பட்டிருக்கின்ற பல ஒழுங்குவிதிகளும் காணப்பட்டாலும், கள ரீதியான செயற்படுத்துகை மற்றும் இந்த விதிமுறைகளை பின்பற்றல் ஆகியன இன்றும் கூட ஒரு பிரச்சினையை தோற்றுவிப்பதாகவே காணப்படுகின்றன. சுகாதாரத் திணைக்களம் உணவுகளின் தரங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளை விதிப்பதிலும் அதே போல் உணவு விநியோக பெறுமான சங்கிலிகளில் பிரகோகிக்கப்படுகின்ற முறையற்ற செயன்முறைகளை தடுப்பதிலும் முக்கிய பங்கை வகிக்கின்றது. அநேகமாக, இத்தகைய தகாத முறையற்ற செயன்முறைகள், சந்தைக்கு வருகின்ற முடிவு உற்பத்திகளில் ஏற்றுக்கொள்ளத்தகாத பெறுபேறுகளுக்கு விளைவாக அமைகின்றன.

நுகர்வோருக்கு சிறந்த பாதுகாப்பான உணவுப் பொருட்களை விநியோகிக்கும் வகையில் உணவு விநியோக பெறுமான சங்கிலி வசதிகளை பாதுகாக்கும் நிமித்தம் சரியான உகந்த அறுவடைக்கு




பிற்பட்டகால செயன்முறைகளை அறிமுகப்படுத்துவதில் ஏனைய பிரதான பங்களிப்பு தரப்பாக விளங்குகின்ற அறுவடைக்கு பின்-தேசிய முகாமைத்துவ நிறுவகம் (NIPHM) நாட்டில் உணவுகள் சோதனையிடுகையில் முக்கிய பங்களிப்புத் தரப்பாக விளங்குகின்ற முக்கியமான சகல பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு உத்தேசிக்கின்றது. இது மேற்குறித்த இரண்டு நிறுவகங்களுக்கு இடையில் சரியான உகந்த வலுவான ஒருங்கிணைப்புக்கு/ கூட்டொத்துழைப்புக்கு வழிவகுக்கும். ஆகையால், உணவுகளின் தரத்தையும் பாதுகாப்பையும் நிர்ணயிக்கக்கூடிய வகையில் பொது சுகாதார பரிசோதர்கள் அவர்களின் கடமைப் பணிகளை நிறைவேற்றுவதற்காக IPHT நிறுவகத்தின் தொழில்நுட்ப உதவிகளையும் ஆய்வுகூட வசதிகளையும் அறிமுகப்படுத்தும் நிமித்தம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை பேணுவதற்கும் மற்றும் சரியான ஒரு உணவு பரிசோதனை நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவுவதற்கும் சகல மாவட்டங்களிலும் (25) 1500 பொது சுகாதார பரிசோதகர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தும் குறிக்கோளுடன், இந்தக் கருத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

19 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த முடிந்தது. 916 பொது சுகாதார பரிசோதகர்களுக்கு உணவுப் பாதுகாப்பும் மற்றும் பகுப்பாய்வு கருவிகளும் தொடர்பான விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன. வதிவிடம் சார்ந்த மற்றும் வதிவிடம் சாராத பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.





9. நாட்டில் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் மற்றும் உணவுப் பாதுகாப்பு இலக்கை அடைவதற்கும் அக்கறையுடைய தரப்புகளுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்காக ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துதல்



உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப் பகுப்பாய்வு ஆகியன உலகலாவிய ரீதியில் உணவுப் பாதுகாப்பு இலக்கை அடைவதில் முக்கியமான காரணிகளாக விளங்குகின்றன. ஆகையால், பகுப்பாய்வு சார்ந்த பல நுட்பங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. உற்பத்தி நடபடிமுறையில், உணவுப் பொருட்கள் எந்தவொரு நேரத்திலும், எந்தவொரு இடத்திலும் பழுதடையக்கூடும் என்பதால், உணவுக் கைத்தொழிலில் உணவுப் பாதுகாப்பு ஆபத்துக்களை குறைக்கும் நிமித்தம் உலகலாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளன. நாட்டின் தாராள வர்த்தகக் கொள்கைகள் உள்நாட்டு சந்தைகளில் அதிக பல உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு நுகர்வோரை அனுமதிக்கின்றன. உலோகப் பதார்த்தங்கள் கலப்பதால் பாரியளவில் ஏற்படும்

பழுதடைவுகள், பூச்சிநிாசினிகளின் கழிவுகள், நுண்ணங்கிகளின் தாக்கங்கள், போஷாக்கு ரீதியான தர இழப்புகள், ஈரழிப்பு அளவு, உறுதித்தன்மை மாற்றங்கள் அடங்கலாக ஏனைய சில பௌதீக தர மாற்றங்கள் என்பன போன்ற விநியோக மற்றும் பெறுமான சங்கிலி செயற்பாடுகளில் எதிர்நோக்கும் உணவுப் பாதுகாப்பு சார்ந்த பிரச்சினைகளை ஒழிக்கும் நோக்கில் பல வாடிக்கையாளர்களுக்கு சிறந்த ஆய்வுகூட சேவைகளை வழங்க இந்த NIPHM நிறுவகம் திட்டமிட்டுள்ளது.





மேலும், பூச்சிநாசினிகள் போன்ற தீங்கான இரசாயனப் பதார்த்தங்களின் பிரயோகத்திற்கு பதிலாக புகையடித்து தொற்றுநீக்கல் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களை பிரதியீடு செய்யலாம். சில காலங்களுக்கு முன்னர், நெற் சந்தைப்படுத்தல் சபை, அரிசி ஆலைகள், இலங்கையிலுள்ள கூட்டுறவு சங்கக் கடைகள் என்பவற்றின் வர்த்தளவான களஞ்சியசாலைகள் புகையடித்து தொற்றுநீக்கல் தொழில்நுட்பங்களை பிரயோகித்து, NIPHM நிறுவகத்தினால் தொற்றுநீக்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் கிடைக்கக்கூடிய அத்தகைய புகையடித்து தொற்றுநீக்கும் பிரிவு தற்பொழுது வழக்கற்று காணப்படுகின்றது. அதன் அதிகமான பாகங்கள் தற்பொழுது காலாவதியாகிய நிலையில் காணப்படுகின்றன. ஆகையால், நாடு முழுதிலுமுள்ள தானியங்களை பதனிடும் பல தரப்புகளுக்கு இந்த சேவை வசதி கிடைப்பதில்லை. ஆதலால், புகையடித்து தொற்றுநீக்கும் பிரிவை தாபிக்கும் தேவை வலியுறுத்தப்படுகின்றது. இந்த வசதி காணப்படுமாயின், தானிய களஞ்சியசாலைகளில் நிகழும் அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை அதிகளவில் குறைப்பதற்கு மேலும் உதவியாக அமையும். ஆகையால், ஆய்வுகூட அபிவிருத்திற்கான இந்தக் கருத் திட்டம் மேலே கூறப்பட்டது போல் உணவுத் துறைக்கு தேவையான அதிகளவு வசதிகளை வழங்குவதில் இலக்குக்கொள்கின்றது. இந்த நிலையில், இந்த நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வசதிகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் வர்த்தகளவிலான தானிய களஞ்சியசாலைகளுக்கு புகையடித்து தொற்றுநீக்கும் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கும் என அக்கறையுடைய தரப்புகளுக்கு ஆய்வுகூட சேவை, பௌதீக, இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் முதலிய சேவைகளை வழங்கும் குறிக்கோள்களுடன் ஆய்வுகூட வசதிகள் மேம்பாட்டுக் கருத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆதலால், குறிப்பாக இந்த நிறுவகத்தின் ஆய்வுகூடங்கள், நுண்ணுயிரியல் ஆய்வுகூடங்கள் மற்றும் உணவு பதனிடும் ஆய்வுகூடங்கள் என்பவற்றின் மேம்பாடுகள் குறித்த கருத் திட்டத்தின் செயற்பாடுகளினூடாக மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்தும் செயல் நடவடிக்கையானது இந்த நிறுவகத்தின் ஆராய்ச்சியும் பயிற்சியும் சார்ந்த பிரதான செயற்பாடுகளை இயலச்செய்யும். மேலும், இது ஆராய்ச்சியினூடாக நவீன தொழில்நுட்ப அபிவிருத்திற்கு புதிய ஒரு பாதையை கண்டுகொள்வதற்கும் உதவும். மேலும், பல அக்கறையுடைய தரப்புகள், அவற்றுக்கு அபிவிருத்தி அடைந்த ஆய்வுகூட வசதிகளை அடையக்கூடியதாக இருப்பதால், இந்தக் கருத் திட்டத்தினூடாக அத்தகைய தரப்புகள் நேரடியாக அல்லது மறைமுகமாக நன்மையடையும். உணவு ஆராய்ச்சி ஆய்வுகூட வசதிகள் புத்தாக்கத்தைக் கொண்டு, பயிற்சி ஆற்றலும் மேம்படும்.

விஸ்தரிப்பு

விஸ்தரிப்பு பிரிவு அரச நிறுவனங்களுடனும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் ஒன்றிணைந்து அதன் நாடளாவிய விஸ்தரிப்பு நிலையங்களினூடாக தனது தொழில்நுட்ப பரம்பல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. கள மட்ட விஸ்தரிப்பு பணியினூடாக தொழில்நுட்பத்தை பரம்பல் செய்வது இந்த நிறுவகத்தின் பிரதான செயற்பாடுகளில் ஒரு செயற்பாடாகும். இந்த செயற்பாடு 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

தொழில்நுட்ப பரிமாற்றல் சார்ந்த செயற்பாடுகளின் நிமித்தம் தேர்ந்தெடுக்கப்பட்ட வித்தியாசமான முக்கிய பிரிவுகள்

a) விவசாயப் பயிர்களில் அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் ஏற்படும் இழப்புகளை குறைத்தல்

b) களஞ்சிய முறைகளுக்கு தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்

c) அரிசியினதும், பருப்பு வகைகளினதும் மற்றும் ஏனைய தானியங்களினதும் பதனிடுகை

d) வாசனைப் பொருட்களின் பதனிடுகை


e) பழங்களுக்கும் மற்றும் காய்கறிகளுக்குமான பெறுமான சேர்ப்பு

f) அரிசி மற்றும் பருப்பு மைய உற்பத்திகள் தயாரிப்பு

g) இலங்கையில் மானிட, போஷாக்கு, உணவுப் பழக்கவழக்கங்கள் என்பன தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

நாடளாவிய விவசாய விஸ்தரிப்பு வலையமைப்பு கீழ்காணும் பிரதான பயிர் உற்பத்திப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள ஏழு அறுவடைக்கு பின்-தொழில் நிலையங்களில் உள்ளடங்குகின்றன.

1. அனுராதபுரம் (அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் அடங்கிய)
2. அம்பன்பொல (குருனாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய)
3. கண்டி (கண்டி, மாத்தளை, கேகாலை ஆகிய மாவட்டங்கள் அடங்கிய)
4. நுவரெலியா (நுவரெலியா, வெலிமட, பதுளை ஆகியன அடங்கிய)
5. அம்பாறை (அம்பாறை, மொனராகல், மட்டக்களப்பின் ஒரு பகுதி, மகாவலி 'சி' முறைமை ஆகியன அடங்கிய)
6. அம்பாந்தோட்டை (அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, எம்பிலிபிட்டிய ஆகியன அடங்கிய)
7. கிளிநொச்சி (கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய)
8. கொழும்பு (கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்கள் அடங்கிய)



8 விஸ்தரிப்பு நிலையங்களினால் அணவப்பட்டு வருகின்ற தற்போதைய நாடளாவிய தொழில்நுட்ப பரிமாற்றல் செயற்பாடுகள்

குறித்த மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், விவசாயிகள், சேகரிக்கும் தரப்புகள், பதனிடும் தரப்புகள், வர்த்தகர்கள், அரச தனியார் துறை நிறுவனங்களின் விஸ்தரிப்பு பணியாட்கள், ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் முதலிய தரப்புகளில் இலக்குக்கொள்கின்ற பல விஸ்தரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டமை விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட பிரதான செயற்பாடுகளில் ஒரு செயற்பாடாகும். இந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்த நிறுவகத்தினால் நடத்தப்பட்டு வருகின்றன. NIPHM இன் பயிற்சி செயற்பாடுகள் தானியங்கள், நவதானியங்கள், வேர் கிழங்கு வகைகள், பழ வர்க்கங்கள், மரக்கறி வகைகள் போன்ற பிரிவுகளில் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஊழியர்கள், வர்த்தகர்கள், பதனிடும் தரப்புகள், உற்பத்தித் தரப்புகள் முதலிய தரப்புகளின் அறிவை மேம்படுத்துவதில் இலக்குக்கொண்டிருக்கின்றன.





பயிற்சி


பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வரும் இரண்டு வகுதிகளில் நடத்தப்பட்டன. இந்த நிறுவகத்தில் நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களாக நடத்தப்படுகின்றன. குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உரிய துறையில் நடத்தப்பட்டன. இந்த சகல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் அக்கறையுடைய தரப்புகளினது தேவைகளின் அடிப்படையில் காணப்படுகின்றன. இவை பயன்னுகரிகளின் பயிற்சி சார்ந்த தேவைகளுக்கு உதவும் நிமித்தம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

- வதிவிடம் சார் பயிற்சி நிழக்ச்சித் திட்டங்கள்
- வதிவிடம் சாராத பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

வதிவிடம் சார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

இந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அனுராதபுரத்தில் அமைந்துள்ள ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தில் நடத்தப்பட்டன. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 49 குறுங்கால வதிவிடம் சார்ந்த பயிற்சிப் பாடநெறிகள் நடத்தப்பட்டன. அறுவடைக்கு பின்-தொழில்நுட்ப பல பிரிவுகளில் 1522 நபர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. விபரங்கள் கீழ்காணும் உருப்படங்களில் தரப்பட்டுள்ளன.

குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் விவசாய உற்பத்திகளின் விநியோக பெறுமான சங்கிலிகளிலுள்ள அக்கறையுடைய சகல தரப்புகளிலும் இலக்குக்கொள்ளப்பட்டிருந்தன. பிரதானமாக விவசாயிகள்/பெண் விவசாயிகள், சேகரிக்கும் தரப்புகள், ஏற்றியிறக்கும் தரப்புகள், மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள்/வர்த்தகர்கள், பதனிடும் தரப்புகள் இந்த அக்கறையுடைய தரப்புகளாக காணப்பட்டனர். அரச நிறுவனங்களினதும்



Residential trainees of NIPHM in 2018

